74
1959
MADRAS
74
1-59





# பூலித்தேவனா புலித்தேவனா?

விவாதித்து முடிவு கூறும்
மிகச் சிறந்த நூல்.

V211'269
N59

தேனருவி வெளியீடு

133184

தேனருவி வெளியீடு

மறைந்து கிடந்த உண்மைகள்
அவற்றை விளக்கும் ஆராய்ச்சி

# பூலித் தேவஞ? புலித் தேவஞ?

புலியூர்க் கேசிகன்

விற்பனை உரிமை:
அருணா பப்ளிகேஷன்ஸ்
தியாகராயநகரம் : : சென்னை—17.

பதிப்புரிமை உடையது

முதற் பதிப்பு : சனவரி, 1959

**விலை : ஐம்பது காசுகள்**

குமுதம் அச்சகம், 76, எல்லிஸ் ரோடு, சென்னை—2.

# என் இந்த நூல்?

தமிழ் நாட்டில் நிலவிவருகின்ற வருந்தத்தக்க நிலைதான் இப்படி ஒரு சிறு புத்தகம் வெளியிட்டாகவேண்டிய நெருக்கடியான நிலைமைக்குக் கொணர்ந்துவிட்டது. 'நம் வருங்காலம் எவ்வாறு அமைய வேண்டும்?' என்று சிந்தித்து, வருங்காலத்தினைச் செம்மைப்படுத்த உதவும் நல்ல கருத்துக்களை நாட்டிலே பரவச் செய்யவேண்டிய காலம் இது. ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபட்டுவிட்ட போதிலும், நம்மை அழுத்திக் கொண்டிருக்கும் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளிலிருந்து நாம் முழுவதும் விடுபட்டாகவில்லை. அதற்காவன செய்வதற்கு அரசியல் தலைவர்களும் எழுத்தாளர்களும் முயலவேண்டியிருக்கக், கடந்துபோன செய்திகளிற் சிலவற்றை மக்கள் கவனத்திற்குத் திருப்பிவிட்டு, மக்களிடையே நேர் எதிரும்புதிருமான கருத்துக்களை விதைத்து வருகின்றனர். இது அறவே வேண்டாத வேலையாகும்.

எனினும், நாம் விரும்பாத போதிலும், அந்த விபரீத வித்துக்கள் தமிழ் நிலத்திலே விழுந்துவிட்டன. அது அடர்த்தியாக வளர்ந்து தமிழ் மக்களிற் பெரும்பாலோரின் உள்ளங்களை ஆக்ரமித்துக் கொள்ளவும் தொடங்கி வருகிறது. இந்தச் சமயத்தில் சில செய்திகளை மக்கள் கவனத்திற்குக் கொணர்ந்து, உண்மை நிலைமையைத் தெளிவுபடுத்துவது கடமையாகின்றது. அந்தக் கடமையுணர்வின் பயனே இந்தச் சிறு நூல்.

உண்மைகாண உவந்து முன் வரும் தமிழகம் இதனையும் விரும்பி வரவேற்கும் என்று நம்புகிறேன்.

—புலியூர்க் கேசிகன்

# உண்மை வெளிவர வேண்டும்!

தமிழ் நாட்டிலே, இன்று எங்கு பார்த்தாலும் ஒரு விநோத மான வருத்தம் தரக்கூடிய கிளர்ச்சி நடைபெற்று வருகிறது. 'கட்டபொம்மன் தமிழ் மானங்காத்த மாவீரன்' என்று ஒரு சிலரும், 'இல்லை இல்லை! அவன் ஒரு கொள்ளைக்காரன்,' என்று ஒரு சிலரும் பேசியும் எழுதியும் வருகின்றனர். இரு சாரார் கருத்துக்களும் மக்கள் மத்தியிலே நாடோறும் ஒருவித வெறியுடன் விதைக்கப்பட்டு வருகின்றன. இருசாராரும் தத்தம் கருத்துக்களுக்கு ஏற்பப் பழைய சரித்திர சம்பந்தமான ஆதரவு களுக்கு விளக்கமும் வியாக்யானமும் தருகின்றனர்.

'இறந்துபோன வீரர்களைப் பற்றி இப்படிக் கிளர்ச்சியும் விவாதமும் தேவையில்லாதவை' என்பதும், 'அவர்களைப் பற்றிய விவாதம் கூடாது' என்பதும், பொதுவான, அனைவரும் கொண்டிருக்கின்ற நியாயமான கருத்தாகும். ஆனல், 'இதுவரை எந்தக் கட்டபொம்மனை 'மாவீரன்' என்று பேசியும் எழுதியும் புகழ்பாடியும் வந்தோமோ, அவனையே இன்று குறை கூறவும் சிலர் முன் வந்து விட்டார் களே? இது சரித்திரம் சம்பந்தப்பட்டவரை எப்படியிருந்தாலும், நம் பேச்சில் கவர்ச்சியுடையவர்களாகிக் கட்டபொம்மனைப் போற்றிய மக்கள், இந்த எதிர்க்கருத்து வளருமானல் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்களோ? நம் மதிப்பும் கௌரவமும் என்னவாகுமோ? எனவே, இதனை எப்படியும் எதிர்க்கவேண்டும்; அதற்குக் கட்டபொம்மன் வீரன்தான் என்ற ஆதாரங்களைத் தேடித் தருவதைவிட, எதிர்ப்பவர்களைத் தனிப்பட்ட முறை யிலே தாக்கிப் பேச விடாது செய்துவிட வேண்டும்' என்று கட்டபொம்மன் ஆதரவாளர்கள் பலரும் தவருன கருத்தோடு பலவாருக முயல்கின்றனர்.

கட்டபொம்மனே தெலுங்கன்; கம்பளத்தான்; பாஞ்சைப் பதியின் தலக்காவலுக்குச் சென்ற அவனுடைய மூதாதை அங்

நாட்டை வஞ்சகமாகக் கைப்பற்றிக் கொண்டவன். பரம்பரை பரம்பரையாகத் தமிழ் நாட்டின் நல்வாழ்வுக்கு ஊறு செய்தவர் கள்தாம் இவன் முன்னோர். இவனோ, போராடாது, போரிலே வீரமரணமும் பெறாது, ஓடி ஒளிந்து கடைசியில் புதுக்கோட்டைக் காட்டில் பிடிபட்டவன்; இவனைப் போய் வீரன் என்று போற்று வதால் தமிழ்ப் பண்புக்கே அவமானம் என்று குமுறுகின்றனர் கட்டபொம்மனை எதிர்த்து எழுந்திருப்பவர்கள்.

இவர்கள் எதிர்ப்புக்கு உதவியாக நான்காவது கட்ட பொம்மனுக்கு முந்திய காலத்திலேயே வெகு தீரமுடன் போராடிய நெற்கட்டாஞ் செவல் பூலித்தேவரின் போராட்டங் களும், பராக்கிரமச் செயல்களும் இவர்கள் கவனத்தை இழுத்தன. பூலித்தேவர்தான் மாவீரர் என்பதற்குரிய சான்றுகளை இந்தக் கூட்டத்தினர் திரட்டிச் சேகரித்தனர். தென்னகத்திலே பதினெட்டாம் நூற்றாண்டில் புரட்சிக் கொடியேந்திப் போரிட்ட தமிழ் வீரன் பூலித்தேவன்தான் என்று தெரிந்தது. பூலித்தேவன் புகழைப் பேசவும் எழுதவும் இவர்கள் தொடங்கினர்.

இப்படியாக; இரு வேறு பட்ட கருத்து வேறுபாடுகளும் சரித்திர ஆராய்ச்சி செய்பவர்களிடையே மட்டும் இருந்தால் அதுபற்றி அதிகமாக் கவலைப்பட வேண்டிய அவசியமே கிடை யாது. ஆனால், இரண்டு சாராருக்கும் இரண்டு தனிப்பட்ட அர சியல் கட்சிகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் வேறு இருக்கின்றன.

ஆகவே, சரித்திர சம்பந்தப்பட்ட கருத்து வேறுபாடு என்ற நிலைமை மாறி அரசியல் பிரச்சாரத்திற்குரிய விஷயமாகக் கட்ட பொம்மன் பூலித்தேவன் பிரச்சினை இப்போது உருவாகிவிட்டது.

தமிழகம் சம்பந்தப்பட்ட மட்டில் தமிழகத்தில் பரம்பரை யாக வாழ்ந்து வந்தவனும், தமிழகத்து வீர மறவனும், தன்னிக ரற்ற ஆற்றலுடன் வெள்ளைப் படைகளையும், கும்பினிப் படை களையும், துரோகிகளின் படைகளையும் எதிர்த்து நின்று உரிமைக் குரல் எழுப்பிய தமிழர் தலைவனுமான பூலித்தேவனுக்குத்தான் முதலிடம் தரப்படவேண்டும். இதில் மாறுபட்ட அபிப்பிராயம் எதுவும் எவருக்கும் இருப்பதற்கு இடமே கிடையாது.

கட்டபொம்மனைவிடக் காலத்தால் பூலித்தேவன் போராட்டம் முந்தியது. போராட்டத்தின் அளவும் கடுமையும் அதிகமானவை. அவன் நடத்திய போர்ச்செயல்களும், அவனை வீழ்த்த மாற்றார் மேற்கொள்ள வேண்டியிருந்த ஏற்பாடுகளும் இழப்புகளும் பயங்கரமானவை. அவன் நண்பர்கள் மாபெரும் தகுதியுடையவர்கள். அவன் திட்டம் அப்பழுக்கில்லாத உரிமை முழக்கம். டச்சுக்காரரோடோ அல்லது வேறெந்த ஐரோப்பியரோடோ அவன் உறவு கொள்ளவில்லை. எல்லோரையும் பகைவராகக் கருதித் தமிழ் மண்ணின் சுதந்திரத்தைக் காக்க மேலப்படாகைப் பாளையங்களையெல்லாம் ஒன்று திரட்ட முற்பட்டவன். இவன் முயற்சியினை ஜகவீர கட்டபொம்மன் கூட்டமும் ஆதரித்திருந்தால் தமிழ் நாட்டுச் சரித்திரம் வேறு விதமாக உருவாகியிருக்கும். இதைக் கட்டபொம்மனை ஆதரிப்பவர்கள்கூட ஏற்றுக் கொள்ளுகின்றனர்.

இந்த நிலையில் கட்டபொம்மன் பற்றிய விவாதத்தை விட்டு விட்டு இருசாராரும் ஒப்புக்கொள்ளும் பூலித்தேவனைப் போற்றி வந்தால் தமிழ் மக்கள் உள்ளம் களிப்படையும். ஆனால், இந்த நல்ல மனப்பான்மை நாட்டிலே வேர்கொள்ளவில்லை.

கட்டபொம்மன் ஆதரவாளர்கள் பூலித்தேவனைப் பற்றி எவராவது பேசினாலே அவரைத் தம் பகைவராகக் கருதத் தொடங்குகின்றனர். பூலித்தேவர் புகழ்பாட முன் வந்தவர்களோ கட்டபொம்மன் புகழ் பாடுவோர் தமிழ் வீரனைப் போற்ற மறுப்பவர்கள் என்றே கருதுகின்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில், பிரசாரமும் விவாதங்களும் போகிற வேகத்தில் எப்பொழுதோ, எவராலோ 'பூலித்தேவன்' என்ற பெயர் 'புலித்தேவன்' என்று பிழையாக எழுதப்பட்டுவிடவே, அதனையே பூலித்தேவர் புகழ் பாடுவோரிற் பலர் பின்பற்றித் தமிழ் மக்களிடையே மீண்டும் மீண்டும் வற்புறுத்திப் பேசியும் எழுதியும் வருகின்றனர்.

இந்த இரு சாராரின் சிந்தனைகளுக்கும் பொதுவான சில செய்திகளைச் சொல்லி, வரலாற்றில் உண்மை எது என்று அறி

வதற்கும் அறிந்தவற்றைப் பரப்புவதற்கும் பாடுபட வேண்டுமே தவிரப் பிழையாக ஒன்றை முதலில் கொண்டு விட்டதால் பின்னர் அதனை மாற்றாது அப்படியே சாதிக்க வேண்டும் என்று பிடிவாதம் கொள்வது தவறு என்று விளக்கி உரைக்க எழுந்ததே இச் சிறு நூல்.

இதன்கண் காணப்படுவன என் கைக்குக் கிடைத்த ஆதாரங்கள், செய்திகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றில் மாறுதல்கள் இருக்குமானால் அதனை ஆதாரபூர்வமாக மறுப்பதும் விளக்குவதும் வரவேற்கப்பட வேண்டியவை. அவற்றை மனப்பூர்வமாக ஏற்கவும் என்னளவில் தயங்கமாட்டேன். பிழையைத் திருத்திக் கொள்ள உதவியதற்கு நன்றியும் உடையவனாயிருப்பேன்.

ஆனால், அதேபோல இதனைக் கண்ணுறும் பிறரும், இதன்கண் கூறப்படும் கருத்துக்களைச் சீர்தூக்கி ஆராய்ந்து தாங்கள் இதற்குமுன் கொண்டிருந்த கருத்துக்கள் மாற்றப்பட வேண்டியவை என்றுபட்டால் மாற்றிக் கொள்ளவேண்டும் என்பதே என் ஆசை.

மேலும், பொதுவாக, நம் நாடு இன்று விடுதலை பெற்றிருக்கின்ற வேளையில், நம்மவரான மந்திரிகளே நம் ராஜ்யத்தை நிர்வகித்து வரும் காலத்தில், நம் வரலாற்றுச் செய்திகளைப் பற்றி, நம் நாட்டிலேயே கட்சிச் சண்டைகள் உருவாவதையும் பிறவற்றையும் பார்த்து வாளாவிருப்பது நன்றன்று. வரலாறு ஒருவரின், ஒரு சாராரின் உரிமைச் சொத்துமல்ல. ஒரு சாராரின் மனப்போக்கிற்கு ஏற்ற வகையில் உருவாக்கிக் கொள்ளும் சம்பவங்களும் அல்ல. அவை கடந்த கால நிகழ்ச்சிகள். அவற்றை இனி எவரும் மாற்றவோ மறைக்கவோ முடியாது. அதனால், நம் மதிப்புக்குரிய சென்னை அரசாங்கமே இந்த இரண்டு வகையான தகராறுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கும் வகையிலே தலையிட்டு, முறையான சரித்திரம் ஒன்றை உருவாக்கி வெளியிடத் தகுதி வாய்ந்த ஒரு குழுவினரை அமைத்தால் எவ்வளவோ சிறப்பாயிருக்கும்.

ஆராய்ச்சியில் ஈடுபடும் எழுத்தாளர் பலருக்குக் கிடைக்க வாய்ப்பற்றிருக்கும் பல புத்தகங்களும், கடிதப் போக்கு வரத்துக்களும், குறிப்புக்களும் அரசாங்கம் நினைத்தால் மிகவும் எளிதாகக் கிடைக்கும். அவற்றை ஆராய்வதற்கு வேண்டிய ஒத்துழைப்புக்களும் பலவாகக் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. அதனால், மதிப்புக்குரிய நம் சென்னை மாநில அரசு தென்ன கத்துப் பாளையங்களின் போராட்டம் என்ற முறையிலே ஆதார பூர்வமான நூலொன்றை வெளியிட முன் வரவேண்டும் என்று மீண்டும் வேண்டுகின்றேன். அல்லது, அப்படி முன்வரும் சிலருக்காவது வேண்டிய வசதிகள், செய்திகள் சேகரிப்பதற்குச் செய்து உதவுமாறும் வேண்டுகின்றேன்.

தமிழர்கள் பதினெட்டாம் நூற்றாண்டிற்கூடத் தற்புகழ்ச் சியை விரும்பாத தங்கள் பழைய பண்பிலிருந்து எள்ளளவும் மாறி விடவில்லை. இதன் காரணமாக, வரலாறு முறையாக எழுதும் வாய்ப்பற்ற நிலையிலேயே காணப்படுகிறது. அங்கங்கே, கிடைக்கும் குறிப்புக்களையும், செய்திகளையும் கொண்டே வர லாற்றைப் பின்னவேண்டியதிருக்கிறது. இப்படிச் செய்யும்போது, அப்படிப் பின்னுவோரின் சொந்த மனோதர்மங்களும் வரலாற்றில் கலந்துவிடுகின்றன. இருவேறு கருத்துடையோர் எழுதும் ஒரே சரித்திரம் இருவேறு போக்கிலேயே அமைந்தும் விடுகிறது.

இவர்களின், ஆதாரங்களிற் பலவும் அந்தக் காலத்திலே கும்பினியிற் பணியாற்றிய பலரின் கருத்துக்களையும் கடிதப் போக்குவரத்துக்களையும் ஆதாரமாகக் கொண்டவை. பாளையக் காரரை அடக்கி ஒடுக்கவென்றே சென்றவர் இவர்கள். இவர்கள் முடிவுப்படி பயங்கர எதிரிகள் என்பவர், மிகத் தீவிரமாக இவர்களை எதிர்த்து நின்ற வீர மறவர்கள்தாம் என்பதையும் நாம் நன்கு அறிவோம்.

எனவே, பாரபட்சமற்றுச் செய்திகளை ஆராய்ந்து முடிவு கூறும் ஒரு தக்க குழுவினர் இப்பணியிலே ஈடுபடுமாறு அரசாங்கம் செய்யவேண்டும் என மீண்டும் மீண்டும் வேண்டு கிறேன்.

# கட்டபொம்மன் உருவம்?

கட்டபொம்மனைப் பற்றிப் பலபல புத்தகங்கள் வருகின்றன. பலபல கட்டுரைகள் வெளியாகின்றன. நாடகமன்றத்தார்கள் நாடகம் நடிக்கிறார்கள். சினிமாப் படமும் தயாராகிறது. கட்ட பொம்மன்' என்று, ஒரு வகையான உருவ அமைப்பு மக்கள் மனத்திலே பதிய வைக்க முயற்சி செய்யப்படுகிறது. இதுதான் கட்டபொம்மன் உருவமாயிருக்க வேண்டும் என்கிறார்கள் அவர்கள்.

இது மிகவும் கவலைப்பட வேண்டிய செயலாகும் 'ஏன்? எதற்காக?' என்று கேட்கலாம். முதலில், இந்த உருவ அமைப்பு வந்த கதையைக் கூறிவிட்டுப் பிறகு இதைப்பற்றிச் சிந்திக்கலாம்.

கட்டபொம்மனின் இனத்தவரும், தமிழ்ப் பெரும் புலவரு மான திருவாளர் ஜெகவீர பாண்டியக் கவிராயர் அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்னர், பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம் (முதற்புத்தகம்) என்றொரு புத்தகத்தை வெளியிட்டார்கள். அந்தப் புத்தகத்திலே கட்டபொம்மன் குதிரை மேலிருப்பது போன்ற ஒரு படம் வெளிவந்தது. கட்டபொம்மன் உருவப் படங்களுள் அதுதான் முதலாவது உருவப்படம். அது கற்பனையிலே உருவான படம் என்பது வெளிப்படை. சென்னைத் திருவொற்றியூரிலே ஓவியப் பெரும் புலவராகத் திரு. ஜகந்நாதாச் சாரியார் என்ற பெரியார் ஒருவர் இருந்தார்கள். அவர்கள் மிகச் சிறந்த ஓவியத்திறன் வாய்ந்தவர். பலபல ஓவியங்கள் எழுதித் தனித்த புகழ் பெற்றவர். நாடெல்லாம் இன்று பிரபலம் பெற்றுள்ள திருவள்ளுவர் படமும், வள்ளி தெய்வயானையோடு முருகன் ஒருசேர விளங்கும் படமும் அவர்கள் ஓவியத் திறனுக் குச் சான்று பகரும்.

அவர்கள்தாம் பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரத்தில், கட்டபொம்மனுக்கு ஓர் உருவ அமைப்பை முதன் முதல் உருவாக்கியவர்கள்.

இவர்களைப் பல ஆண்டுகளாக நேரிலே பழகி அறிந்தவன் நான். இந்தப் படம் பற்றியும் அவர்களிடம் நான் கேட்ட

துண்டு. அவர்கள் சொன்ன பதில் இதுதான் : கட்டபொம்மன் படம் ஒன்று முகப்பிலே வைப்பதற்கு வேண்டும் என்று கேட்டார்கள்; ஓர் அரசன் எப்படி இருப்பான் என்ற ஓவியக்கலை நுட்பப்படி வரைந்து அனுப்பினேன் என்றார்கள்.

இப்பொழுது தெரிகிறதல்லவா? கட்டபொம்மன் உருவம் வந்த கதையின் ஆரம்பக் கட்டம் இது தான்.

ஜெகநாதாச்சாரியாரின் கற்பனைதான் கட்டபொம்மன் உருவத்தைத் தமிழ் நாட்டுக்குத் தந்தது.

இதற்குப் பின் ஓவியர் பிரபா என்னும் சந்திரா அவர்கள் வரைந்த உருவம் வந்தது. சிவஞான கிராமணியார் அவர்களின் 'வீரபாண்டியக் கட்டபொம்மன்' புத்தகத்திற்கு மேலுறையாக அமைந்தது அது.

சந்திரா அவர்கள் ஓவியர் ஜெகநாதச்சாரியார் அவர்களின் உருவ அமைப்பின் முகபாவத்தை அப்படியே பின்பற்றினார்கள். வண்ண ஓவியத்தில் கட்டபொம்மனின் முகபாவம் உருவாயிற்று.

இந்தப் புத்தகமும் இதில் வந்த உருவமும் கட்டபொம்மன் உருவ அமைப்பின் அடுத்த கட்டம். இதற்குப்பின் வந்தவர் எல்லாரும் இதனைப் பின் பற்றினர்.

இப்படியாக, 'கட்டபொம்மன்' எப்படியிருப்பான் என்று ஓவியத்திலும், அதன் பின் நாடக உருவப் புனைவிலும் வளர்ந்தான். இப்படி வளர்த்தவர் அனைவரும் அறிந்தோ அறியாமலோ விரும்பியோ விரும்பாமலோ இதன் முதல் ஊற்றுக் களமாகத் திகழ்ந்த ஓவியப் பெரும் புலவர் ஜெகநாதாச்சாரியாரை அடியோடு மறந்து விட்டார்கள். கட்டபொம்மன் விழா நடத்துவோர் பலரும் அந்த உருவை உருவாக்கிய மூலகர்த்தாவுக்கு நன்றி கூடச் செலுத்துவதில்லை. ஏன்? அவரைநினைப்பதுகூட இல்லை.

இது நிற்க; கட்டபொம்மன் உருவம் கற்பனை உருவம். இது தான் இப்போது நாம் அறிய வேண்டியது.

இவன் காலத்தில் வாழ்ந்த பலரை நாம் ஓவியத்திலே காண்கிறோம். ஹைதர், திப்பு, முத்துராமலிங்க சேதுபதி போன்றவர்கள் உருவங்கள் அவர்கள் காலத்திலேயே அமைக்கப்பட்டு

இன்று நம்மிடையே வழங்குகின்றன. இதேபோலக் கட்ட பொம்மன் உருவமும் வரையப்பட்டு எங்காவது இருந்தால்...? இத்தனை முயற்சிகளும் வீணாகி விடக்கூடுமல்லவா?

எனவே, இதனை இப்படியே பரவ விடுவது முறையா? நூற்று ஐம்பது வருடங்களுக்கு முன்னிருந்தவன் இவன். இவன் உருவத்தை ஆதாரபூர்வமாக வரையறுக்க இவனைப் பற்றி வாய் ஓயாது பேசுபவர்கள் ஏன் கவலைப்பட மறந்து விட்டார்கள்? ஏன் இந்த நிலை?

## பாரதி பாடாத கட்டபொம்மன்!

கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியிலேயிருந்தவன். வீரத் துடனும் நாட்டுப் பற்றுடனும் அவன் போராடியிருந்தால் பக்கத்து ஊரவரான மகாகவி பாரதியார் இவனைப் பற்றிப் பாடா மல் இருந்திருப்பாரா? இருக்கமாட்டாரல்லவா? ஆனால், பாரதியார் பாடவில்லை. ஒட்டப்பிடாரத்துச் சிதம்பரம்பிள்ளையவர்களின் வீரத் தியாகம் பாரதியாரைக் கவர்ந்தது. ஆனால், கட்டப் பொம்மன் போராட்டம் கவரவே இல்லை.

பாரதி எட்டயபுரத்தார்; அதனால் பாடவில்லை என்பர் சிலர். அது மிகவும் தவறான கருத்து. பாரதி அவ்வளவு தூரம் தவறான மனப்பான்மையுடையவரல்லர். அவர் புரட்சிக் கவி. எதற்கும் அஞ்சாதவர். 'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதி னும் அச்சமில்லை' என்று முழங்கியவர். அவர், கேவலம் எட்டய புரத்து விரோதி என்பதற்காகவா கட்டபொம்மனை ஒதுக்கி இருப்பார்? இந்தச் சிந்தனையே தவறானது.

எட்டயபுரத்தவர்தாம் குருகுஹ தாசப்பிள்ளையவர்கள். எந்த ஆங்கிலேயனை எதிர்த்தவன் என்று போற்றுகின்றார்களோ அந்த ஆங்கிலேய பரம்பரைதான் கால்டுவெல், வெல்ஷ், பானர்மான் முதலியோர். இவர்கள் கட்டபொம்மனைப் பற்றி எழுதவில்லையா என்ன? 'கட்டபொம்மன் வரிதரவில்லை. அதற் கான தகுந்த முகாந்திரம் சொல்லவுமில்லை. எனவே, தண்டிக்கப்

பட்டான்'. இதுதான் அவர்கள் கூறுவது. அவன் போராட்டம் சொந்த நோக்கத்துடன் செய்யப்பட்டது. அதிலும், அவன் கோழையாகிக் களத்தை விட்டே ஓடியவன். இதுதான் பாரதிக்கு வெறுப்பைத் தந்திருக்க வேண்டும். பாரதி பாடவில்லையே என்பது கட்டபொம்மன் ஆதரவாளர்களை உறுத்தியிருக்கிறது. அதனை அவர்கள் பூசிமெழுகவும் தொடங்கிவிட்டனர்.

'கயத்தாற்றில் கட்டபொம்மன்' என்ற நூலிலே அதன் ஆசிரியர் இந்தக் கேள்வியைக் கேட்டு அதற்குச் சமாதானமும் கூற முற்பட்டிருக்கிறார்.

பாரதியாரின் கவிதைத் தொகுதியைப் புரட்டினாராம். 'மறவன் பாட்டு' ஆறுதல் அளித்ததாம். பாரதி வெளிப்படையாகப் பாடவில்லையாம். மறைமுகமாக அந்தப் பாட்டிலே 'தோக்கலவார்' சாதியாரின் துன்பத்தைப் பாடியிருக்கிறாராம். இவ்வாறு எழுதப்பட்டுள்ளது. இது எவ்வளவு பொருத்தமுடைய தென்பதைத் தமிழர்கள் அறிந்துணர்க.

பாரதி தமிழ் நாட்டின் நிலையைக் கண்டு உள்ளங் குமுறியவர். கால காலங்களாகப் படைக்கலம் ஏந்திய தமிழ் மறவர் குடும்பங்கள் தென்பாண்டிச் சீமையிலே பட்டுவரும் வேதனை வாழ்வு அவர் நெஞ்சைப் பெரிதும் உருக்கிற்று.

வீரதீரம் விளங்கிய மறவர் குடிப்பெருமக்களைக் 'குற்றப் பரம்பரையினர்' என்று ஆங்கில அரசாங்கம் ஒதுக்கிய வரலாறு வேறு அவர் நெஞ்சை வாட்டியது.

சங்ககாலம் முதல், வரலாற்றுக் காலம் முதல், கி.பி.18-ம் நூற்றுண்டின் இறுதிவரை நாட்டு உரிமையைக் காத்து நின்ற அந்தத் தமிழ் மறவர்களை நினைத்தார். அவர்கள் குற்றப் பரம்பரையினரா? என்று குமுறினார். அதன் பயன்தான் 'விண்முட்டிச் சென்ற புகழ் போச்சே, மேதினியில் கெட்ட பெயராச்சே' என்ற பாரதிக் குரலின் எழுச்சி. இதனைத் தோக்கலவார் சாதியினைக் குறித்தது என்பது தவறு. மேலும், பாரதியைப் பயன் படுத்தித் தம் கருத்துக்குக் கொண்டுவர முயல்வதாகவும் இது அமையும்.

பாரதியாரின் மறவன்பாட்டு, தென்பாண்டிச் சீமையின் மறவர்களைக் குறித்துப் பாடப்பட்டதே. பூலித்தேவர், தென்

மலை வன்னியர், சிவகிரி வன்னியர், சேற்றூரார், வடகரையார், கொல்லங் கொண்டான் வந்தியத்தேவர், இப்படிப் பல பாளையக்காரர்கள் 18-ம் நூற்றாண்டிலே எழுப்பிய உரிமைக் குரலும், ஆங்கிலேயரின் கொடுமையும், மறவர்களை ஆங்கிலப்படை சுட்டுக் குவித்ததும், படைகளைக் கலைத்ததும் வாழ்வுக்கு வசதியின்றித் திண்டாடவிட்ட நிலையுமே பாரதிக் குமுறலின் காரணமாகும்.

## நாடோடிப் பாடல்கள்

பெரும்பாலும் இவை வரலாற்று முதிர்ச்சி அற்றவர்களால் பாடப் பெற்றவை. தாம் எடுத்துக் கொண்ட கதாநாயகர்களின் மீது இல்லாத புகழையெல்லாம் ஏற்றிக் கூறுபவை. உண்மை முப்பது பங்கென்றால், பொய்ம்மை எழுபது பங்கு இவற்றிலே காணப்படும் எனலாம்.

இதற்கு ஒரு நல்ல உதாரணம் கோவலன் கதை. சிலப்பதிகாரம் எவ்வளவு தூரம் இந்த நாடோடிக் கவிஞனின் வாக்கிலே சிக்கிச் சீரழிந்தது என்பதை நாடறியும்.

இந்தக் கவிஞர்கள் எதனையும் பாடிவிடுவார்கள். அழகர் மலைக் கொள்ளைக் கூட்டத் தலைவனாயிருந்த சங்கிலிக் கறுப்பனைப் பற்றிக்கூட அருமையாகப் பாடியிருக்கிறார்கள்.

பிற சரித்திர ஆதாரங்களின்றி இவற்றை நம்புவதும், இவற்றையே ஆதாரங்களாகக் கொள்வதும் பொருத்தமன்று.

இவற்றுள் காணப்படும் வேறுபாடுகளும் பலவாகும். அவைகள் மிகவும் விசித்திரமானவைகளுமாகும்.

## தமிழ் வளர்த்த எட்டயபுரம்

இந்தக் கட்டபொம்மன் ஆதரவாளர்கள் இவனைக் கொள்ளையன் என்ற போது சீறுகிறார்களே தவிர, இவர்கள் மற்றவர்களைத் துரோகிகள் என்று சாற்றுவதற்கு ஓர் எல்லையே கிடையாது. அதற்கு ஓர் உதாரணம் எட்டயபுரத்தார்,

பதினேழு பதினெட்டாம் நூற்ருண்டுகளிலே திருநெல் வேலிச் சீமை போர்க்களமாகவே மாறியிருந்த காலம். போரின் விளைவுகளால் நாட்டுவளமும் நல்வாழ்வும் சீர்கெட்டுச் சிதைந் திருந்த காலம். மக்கள் படும் வேதனைகளும், பொங்கிவரும் மாற் ருனின் வலிமிகுந்த படைக்கலங்களின் பலமும் எட்டயபுரத் தாரின் சிந்தனையிலே கவலையை ஊட்டிற்று. அவர்கள் போரிட்டு அழிவதைத் தவிர வெல்வது முடியாது என்று உணர்ந்தார் கள். முடிவு: நாட்டு மக்கள் நல்வாழ்வு முன்னின்றது. சாவை ஏற்றும் முடிவில் பணிந்து போவதைவிடப் பணிந்து போய்க் காலம் வரும் போது காரியம் சாதிக்கலாம் என்று கருதினர் எட்டயபுரத்தார்.

கட்டபொம்மனின் வெறிச் செயல்களும், கொள்ளையடித்த கொடுமைகளும் அவர்கள் மனத்தை வாட்டின. அவன் அழிந் தால்தான் நாடு உருப்படும் என்றுங் கருதினர். அவன் அழிவுக்கு அவர்கள் உதவவும் முன்வந்தனர். இது அவர்கள் அன்றிருந்த அரசியல் சூல்நிலைகளிலே கொண்ட முடிவு. இந்த முடிவு தவறு என்று இன்று சிலர் கருதலாம். இதற்காக அவர்களை மிகவும் தூற்றுவது வேதனையைத் தருவதாகவேயுள்ளது.

தென்னகத்திலே புலவர்களையும் கவிஞர்களையும் கலைஞர் களையும் போற்றிய பாளையங்களுள் எட்டயபுரமும் ஒன்று. ஆந்திர மரபினராயினும் அவர்கள் தமிழ் வளர்க்கப் பட்ட பாடுகள் மிகவும் போற்றத்தக்கவை.

கடிகை முத்துப் புலவர், கடிகை நமச்சிவாயப் புலவர், சுப்பராம ஐயர், முத்துத் தாண்டவர், பாரதியார், இன்னும் எவ்வளவோ பெருமக்கள் எட்டயபுரம் தந்த தமிழ்ச் செல்வங்கள். தேசிய கவி பாரதியைப் போற்றும் தமிழகம் அவரைத் தந்த எட்டயபுரத்தை இழிவாகப் பேசுவது கொடுமையாகும். இன்றும்கூட அப் பக்கம் செல்லும் கலைஞர்கள் எட்டயபுரத்து அரசர் செய்யும் உபசாரங்களைப் போற்றிப் புகழ்கின்றனர். இவ்வளவு சிறந்த தமிழ்ப் பற்று உடையவர்கள், தமிழ் வளர்க்கச் சமஸ்தானப் புலவர்கள் பலரை ஊட்டி வளர்த்துப் போற்றிய புகழாளர்கள் எட்டயபுரத்தார். கவிதைகளும், காவியங்களும்

எட்டப்பர் புகழை நிலைபெற்ற புகழாக்கி யுள்ளன. இவர்களைத் துரோகிகள் என்று தூற்றுபவரைத், தமிழ் வளர்த்த புரவலரைத் தூற்றும் கொடுமை செய்பவரைத் தமிழ் வளர்ப்போர் பற்றுடையோர் என்று, எப்படி நாம் பாராட்டுவது?

பரம்பரை பரம்பரையாகத் தமிழ் வளர்த்த எட்டயபுரம் இந்தச் சுயநலக்காரர்களால் என்றும் புகழ் மங்கி விடாது. வரலாற்று நிகழ்சிகளைப் பாரபட்சமற்ற நோக்குடனும் அந்தந்தக் கால நிலையுடனும் கருதி நோக்க வேண்டுமே தவிரச் சிலரைத் தூற்றுவதே சிலரை உயர்த்துவதாகக் கருதி முனைவது மிகவும் தவறானதாகும். ஒரு நாடக மன்றத்தார் எட்டப்பரை அறிமுகப் படுத்தும் விதம் தமிழ் மக்கள் உள்ளத்தை மிகவும் புண்படுத்துவதாகும். கொள்ளைக்காரன் கட்டபொம்மன் என்றதும் கொதிப்படையும் இவர்கள் மனம் தமிழ் வளர்த்த ஒருவரை இவ்வளவு கேவலமாகக் காட்டும்போதுமட்டும் கொதிக்கவேண்டாமோ?

## புதுக்கோட்டை விவகாரம்!

புதுக்கோட்டை விஜயரகுநாதத் தொண்டைமான் என்றுமே ஆங்கிலேயருக்கு வேண்டியவராக இருந்தவர். இது அன்று எல்லாப் பாளையக்காரர்களுக்குமே தெரியும். அப்படியிருக்கக் கட்டபொம்மன் புதுக்கோட்டை அரண்மனையில் வஞ்சகமாகப் பிடித்துக் கொடுக்கப்பட்டதாகப் பேசுவதும் நடிப்பதும் வரலாற்றுத் துரோகமாகும்.

அண்மையிலே வெளிவந்த சிவகெங்கைச் சரித்திரக் கும்மி என்ற நூல் இதற்கு விளக்கம் தரும் வகையிலே சில செய்திகளைச் சொல்லுகிறது. அதன் ஆசிரியர் பாஞ்சாலங்குறிச்சியைச் சேர்ந்தவர் என்பது அந்தத் தகவலுக்கு மேலும் உறுதி சேர்க்கிறது.

பாஞ்சைக் கோட்டையிலிருந்து தப்பியோடிய கட்டபொம்மன் முதலியோர் கோலார்பட்டியிலே அடைக்கலம் புகுந்தனர். கட்டபொம்மனைப் பிடிக்க எட்டயபுரம் படைகளும், டல்லஸின் படைகளும் விரைந்தன. எல்லாப் பாளையக்காரர்களுக்கும் பானர்மன் வேண்டுகோள் வேறு அனுப்பியிருந்தான்.

படையணிகளைக் கண்டதும் கோலார்பட்டியிலே கட்டபொம்மன் போராடி உயிர் விடவில்லை. தன்னைச் சேர்ந்தவர்கள் பலர் அகப்பட்டுக் கொள்வார்களே என்று கவலைப்படவும் இல்லை. ஆனால், தான் பிழைத்தால் போதுமென்று குதிரையேறி ஓடிவிட்டான். என்னே அவன் வீரம்!

தானாபதிப் பிள்ளை அவர் தம்பி வீரபத்திர பிள்ளை முதலிய 24 பேர்கள் வெள்ளையனுக்குப் பலியாகக் கைதாயினர். இதுவா வீரன் செயல்? தன்னைச் சேர்ந்தவரைத் தன் உயிர் போகும் வரை காத்து நிற்பவனல்லவா வீரன்! கைவேல் களிற்றொடு போக்கித் தன் மெய்வேல் பறியாநகும் வீரம் எங்கே? இஃது எங்கே?

அங்கிருந்து கட்டபொம்மன் சிவகெங்கைச்சீமைக்கு ஓடினான். அங்கிருந்த மருது சகோதரர்கள் அது சமயம் வெள்ளையரோடு சமாதானமாக இருந்த காலம். அவர்கள் கட்டபொம்மனைக் காப்பாற்றிப் புகலிடம் தந்தால் தங்களுக்கு ஆபத்து என்று பயந்தனர். அவனைக் காப்பாற்ற முடியாது என்று சொல்லி, புதுக்கோட்டைக் காட்டுக்குள் சென்று ஒளிந்து கொண்டால் புதுக்கோட்டையார் கும்பினிக்கு வேண்டியவராதலால் ஆபத்து அதிகமில்லை என்று தூண்டி, அங்கே செல்லச் சொல்லி விட்டனர்.

வேறு வழியின்றிக் கட்டபொம்மன் கூட்டம் அங்கே சென்றது. பானர்மனுக்கு இந்தச் செய்தி தெரிந்தது. எப்படித் தெரிந்திருக்க முடியும்? சிவகங்கைச் சீமையிலிருந்துதானே செய்தி கிடைத்திருக்கவேண்டும். அவன் புதுக்கோட்டையாருக்குக் கடிதம் அனுப்பினான். அவர்கள் கட்டபொம்மனைக் காட்டிலே கைது செய்தனர். அப்படிக் கைது செய்தவன் முத்து வீர வைரவ அம்பலக்காரன். கைது செய்து (23-9-1799-ல்) புதுக்கோட்டைச் சிறையிலே வைத்திருந்து, பின்னர் இவனைப் பானர்மெனிடம் அனுப்பினர்.

இது உண்மையாயிருந்தால் இங்கே புதுக்கோட்டையார் எப்படித் துரோகியாவார்களோ தெரியவில்லை. புதுக்கோட்டையார் ஆங்கிலேயருக்கு நண்பர்கள் எனத் தெரிந்தும், அங்குசெல்லக் கட்டபொம்மன் துணிந்ததற்கும், செல்லச் சிவகங்கை மருது

தூண்டியதற்கும் காரணம் யாவையோ? இதற்கு எவருமே இதுவரை பதில் சொன்னதாகத் தெரியவில்லை.

கட்டபொம்மனுடன் தப்பிச் சென்றவர்கள் மொத்தம் ஆறு பேர்கள். இவர்கள் புதுக்கோட்டைத் தொண்டைமான் நாட்டிலே புகுந்து அவன் படைகளை எதிர்த்து நிற்கப் போவதும் இல்லை. இவனைப் பிடிக்க ஒரு பெரிய முயற்சியும் வஞ்சகச் சூழ்ச்சியும் புதுக்கோட்டைத் தொண்டைமானுக்கோ, முத்துவயிரவன் அம்பலத்துக்கோ தேவையுமில்லை. இதை அறியாமல் புதுக் கோட்டையார் துரோகிகள் என்று பிதற்றுவது மிகவும் அறியாமையாகும். மேலும், அப்படி ஒரு கருத்தை இந்த நாளிலே பரப்புவது தமிழரின் ஒற்றுமையைக் குறைக்க முயலும் தீய செயலுமாகும்.

## தானாபதி கொள்ளையடித்தவரா?

கட்டபொம்மனுக்குத் தெரியாமல் தானாபதி ஸ்ரீவைகுண்டத் திலே கொள்ளையடித்ததாகவும், அந்தச் செய்தி கேட்ட கம்பெனி யார் அவரைத் தம்மிடம் ஒப்பிக்குமாறு ஒரு தூதனை அனுப்பிய தாகவும், கட்டபொம்மன் அனுப்பவில்லை என்றாலும், அஞ்சி நடுங்கித் தானாபதிப் பிள்ளை கட்டப்பொம்மன் காலில் விழுந்து மன்னிப்புக்கேட்டதாகவும் இன்று நடத்தப்பட்டு வரும் நாடகத் திலே ஒரு காட்சி வருகிறது. இந்தக் காட்சி உண்மைக்குப் புறம் பானது என்பதை அரசாங்கக் கையெழுத்துப் பிரதி நூலகத்தி லுள்ள ஏட்டுப் பிரதி விளக்கும். கட்டபொம்மன்தான் தானாபதி யைப் படை வீரருடன் அனுப்பியதாகவும், அந்த நெல்லைக் கொணர்ந்து தானாபதியின் உறவினரான சங்கரலிங்கம் பிள்ளைக் கும், ஊமைத்துரை முதலியோருக்கும் திருமணங்கள் செய்ததாக வும் அந்த ஏடு கூறுகிறது. படைப்பலத்துடன் தானாபதி சென்ற திலிருந்தே கட்டபொம்மனுக்குத் தெரிந்துதான் அவன் ஏவலின் படிதான் சென்றார் என்று தெரியவில்லையா? இருந்தும், ஒரு சிறந்த தமிழ் மகனை, கட்டபொம்மன் தங்களை எதிர்த்துப் போராடத் தூண்டுதலாயிருந்தவரே இந்தத் தானாபதிதான் என்று வெள்ளை

யனே குற்றஞ் சாட்டும் ஒரு தமிழனே, இப்படி இழிவு படுத்துவது, வேண்டுமென்றே அவமானப் படுத்துவது மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். தமிழ் மகனுன பிள்ளையைக் கம்பளத்தான் காலிலே விழச் செய்த நாடகத்தார்க்குத் தமிழரசுக் கழகத் தலைவரும் ஆதரவு தந்து ஆதரிப்பது மிகவும் வருத்தந் தருவதாகவும் உள்ளது. கட்டபொம்மனை உயர்த்த வேண்டுமென்ற நினைவிலே இப்படிப் பலரையும் இழிவுபடுத்துவது நாடக முறைப்படி அதன் காட்சி யமைப்புக்குத் தேவை என்று சிலர் கூறுகின்றனர். ஆனுல், அது இந்தக் கேவல நிலைக்குப் போவது தமிழ் உள்ளங்களைப் புண்படுத்துவதாகுமல்லவா?

ஆந்திரரிடமிருந்து பறிபோன வடவேங்கடத்தை மீட்க 'அறப்போர்' என்று முழங்கிய சிவஞானம் அவர்கள், தம் மேற் பார்வையிலே இப்படித் தமிழன் கீழான முறையிலே உருவாக்கப் பட்டிருப்பதைத் தடுத்திருக்க வேண்டும். இனியாவது தடுப்பார்கள் என்றுதான் நாம் நம்புகிறேம்.

இப்படியாகப் பலபல தவருன செய்திகளுடன் சிலர் கூடிப் புனைந்து மக்களை நம்பவைத்து மாவீரனுக்கி விட்டனர் கட்ட பொம்மனை. சரித்திரம் சரியாக எழுதப்படாத காரணமும் சொல் வன்மையும் பிற அரசியல் சூழல்களும் இந்தச் செயலுக்குத் துணை புரிய, ஏதுமறியாத மக்கள் கட்டபொம்மன் தமிழகத்தின் மானங் காத்த மாவீரன் என்றே நம்பவும் தொடங்கி விட்டனர்.

## வானம் பொழியுது பூமிவிளையுது!

கட்டபொம்மன் புகழ்பாடுவோர் பலரும் பெருமிதத்துடன் செய்யும் முழக்கம் இது. இது வெறும் போலிக்குரல்! கட்ட பொம்மனுக்கு முன்னிருந்த அவன் தகப்பன் பாட்டனும் முப் பாட்டனும் ஆர்க்காட்டு நவாபுக்கும், அதற்குமுன் ஆதிக்கம் வகித்த நாயக்க மன்னர்களுக்கும் வரிகட்டி வாழ்ந்தவர்கள்தாம். இவனும் வரிகட்டப் பணமில்லை என்று பாக்கிப் பட்டியலில் இருந்தவனே தவிர, வரியே கிடையாது என்று முழங்கியவனல்லன். இவன் இப்படி உரிமைக்குரல் எழுப்பிய தீரன்

என்ருல், இராமநாதபுரத்துக்கு ஊர் ஊராக கலெக்டரைப் பின் பற்றி ஓடியதும் பிறவும் அவனுக்குச் சான்று பகரவில்லையே?

மேலும், இவன் பாளையக்காரன். இவனுக்கு மேலாட்சி நிலையிலிருந்தவரிடம் இவன் உரிமைக்குரல் எழுப்பியவன் என்ருல், இவன் குடிகளிடம் வரிவாங்கியதுகூட அநியாயமாகுமே! 'மானம் பொழியுது பூமி விளையுது' என்ற அதே குரலை இவனுடைய 96 கிராமங்களும் எழுப்பியிருந்தால் இவன் 'ஆஹா! உண்மை! உண்மை!!' என்று அவர்களைப் போற்றியிருப்பாஞ?

நாடோடிக் கவிஞனின் வீறு பெற்ற தமிழ்ச் சொற்கள் கட்டபொம்மனை உரிமை முழக்கஞ் செய்தவனுகப் புனைந்துரைக் கின்றனவே யன்றி, அது உண்மையின் குரல் அல்ல என்பதை அனைவரும் அறிவர்.

வரி கேட்க எந்தக் காரணம் நவாபுக்குத் தகுதியில்லை என்று கூறப்படுகிறதோ, அதே காரணம் கம்பளத்துக் கட்டபொம்மனுக் குத் தமிழகத்துக் குடிமக்கள் வரி தராமல் இருக்கவும் கூறப் படலாம் அல்லவா?

இராமநாதபுரம் கொள்ளை, தூத்துக்குடிக் கொள்ளை, ஸ்ரீவைகுண்டம் கொள்ளை, இவையும் பிறவும் இந்தத் தெய்வ நீதிக்கு இவன் கொஞ்சமும் மதிப்புத் தராதவன் என்றே காட்ட வில்லையா?

## இராமலிங்க விலாசம்

இராமலிங்க விலாசத்திலிருந்து கட்டபொம்மன் தப்பி வெளியே வந்தது அவனுடைய திறமையில் அன்று. அன்றிருந்த சேதுபதியானவர் செய்த உதவியினுல். அங்கிருந்த ஏதோ ஒரு மறைவு வழிமூலம் அவன் அரண்மனைக்கு வெளியே கடத்தப் பட்டதாகத்தான் உண்மை யறிந்தோர் கூறுகின்றனர். தளபதி கிளார்க் ரகசியமாகச் சென்ற கட்டபொம்மனுல் எதிர்பாராத விதமாகக் குத்திக் கொல்லப்பட்டான். அதற்குள் அங்கே யிருந்த வெள்ளையத்தேவன், ஊமைத்துரை முதலியோருடன் சேர்ந்துகொண்டு இவன் தப்பி ஓடி விட்டான்.

அவனுடன் வந்த தானுபதிப் பிள்ளையோ அவ்வூரிலிருந்த தம் உறவினர் வீட்டிலே உணவருந்திவிட்டு நடந்ததை அறியாமல் இராமலிங்க விலாசம் நோக்கி வந்துகொண்டிருந்தார். அவரைக் கும்பெனியார்கைது செய்தனர்.

தானுபதி கைது செய்யப்பட்டார்! கட்டபொம்மன் அவரை மீட்கப் போரிட்டிருந்தால் அவன் வீரம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய 'அளவு உயர்ந்திருக்கும். ஆனல், அவனே, அப்படிச் செய்யவில்லை. தன் கூட்டத்தோடு பாஞ்சைக் குப் பறந்து போய்விட்டான்.

தானுபதிப் பிள்ளை வீரர்; அதுமட்டுமல்ல, அறிவுத்திறனும் வாய்ந்தவர். தகுதியற்ற தலைவனிடம் சேவை செய்துவந்த ஒரே தவறுதான் அவர் உயிரை இழக்கக் காரணமாயிற்று. அவர், கலெக்டர் ஜாக்சனின் சதிகளை அம்பலப்படுத்தினர். கம்பெனியின் சென்னை நிர்வாகிகள் ஜாக்சனை நீக்கிவிட்டு லூஷிங்டனைக் கலெக்டராக்கினர். தன்னைக் கைது செய்த ஜாக்சனைப் பழிதீர்த்த நுண்ணறிவுடைய பிள்ளையா நெல்லைக் கொள்ளையடித்திப்பார்? தன்னைக் கைவிட்டுப் போனவன் என்பதையும் நினையாது மீண்டும் தன் உயிருள்ளளவும், தானும் தன் குடும்பமும் உதவிநின்று வெள்ளை ஏகாதிபத்திய வெறியர்களின் சினத்துக்கும் ஆளாகித் தூக்கிலே தொங்கிய அந்த மறத்தமிழனு கொள்ளைக்காரன்? அவரா கோழை? அல்லது, அவரை விட்டு விட்டு ஓடினர்களே அவர்கள் கோழைகளா?

பாவம்! தானுபதிப் பிள்ளை வஞ்சகமறியாதவர். வெள்ளை ஆதிக்கம் கண்டு வெதும்பியவர். ராமநாதபுரத்தில் தன்னைக் கைவிட்டுச் சென்றதைக்கூடப் பாராட்டாது, பாஞ்சைக்கே வந்து, மீண்டும் கட்டபொம்மனுக்குத் துணை நின்ருர்.

ஆனல், கட்டபொம்மன் கூட்டம் அவரையும் அவர் தம்பியையும் கோலார்பட்டியில் பகைவர்களிடம் காட்டிக் கொடுத்துக் கைவிட்டுவிட்டுத் தம் உயிரே பெரிதாகக் கருதித் தப்பியோட மீண்டும் தவறவில்லை!

இப்படிச் செய்த நம்பிக்கைத் துரோகமேதான் புதுக் கோட்டைக் காட்டிலே கட்டபொம்மனையும் பழிவாங்கியது போலும்!

## பரம்பரை தோன்றிய காலம்?

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரின் பரம்பரையானது கி. பி. 12-ம் நூற்றுண்டு முதலே தமிழகத்தில் ஆண்டு வந்த தாகக் கூறப்படுகிறது. சரித்திர ஆராய்ச்சி செய்பவர்கள் அதனை ஏற்கவில்லை .கி. பி. 1148-ல் இவர்களின் ஆதிநாயகனுன ஜகவீர பாண்டியக் கட்டபொம்மு பதவிக்கு வந்தான் என்பது விபரீத மான ஒரு கற்பனையே தவிர வேறல்ல!

அந்தக் காலத்திலே சோழர்கள் மிகவும் வலிமையுடையவர் களாகப் பாண்டிய மண்டலத்தையும் சேர்த்து ஆண்டிருக்கின் றனர். இரண்டாம் குலோத்துங்க சோழன் காலம் அது. அவனும் அவன் மகன் ராஜராஜனும் பேரரசு செலுத்தி வந்த காலம். அந்தச் சமயத்திலே ஆதிக்கட்டபொம்மு வந்ததாகக் கூறுவதும், அவன் சாலிகுளத்தருகே இருந்த ஜகவீர பாண்டிய னுக்கு உதவியாக விசயராமன் உக்கிரசிம்மன் ஆகியோரை வென்றதாகக் கூறுவதும் நம்பமுடியாதவையே. மேலும், ஜகவீர பாண்டியன் என்ற பெயரோடு பாண்டியர் எவரையுமே வர லாற்றிற் காணவும் முடியவில்லை.

எனவே, இவையனைத்தும் தமக்குத் தனிப் பெருமை தேடிக் கொள்வதற்காகப் புனைந்து கொண்டவையே என்று சொல்லலாம். தென்னகத்திலே முதன்முதல் ஏற்பட்ட கம்பளப் பாளையம் எட்டயபுரம் ஒன்றுதான். இவர்கள் வந்த காலம் அலாவுதீன் கில்ஜி என்பவன் டெக்கான்மீது படையெடுத்து வந்து தேவ கிரி மன்னனுகிய யாதவ இராமச்சந்திரனை வென்றதன் பின் என்பர். அது கி. பி. 1294-ல் நடந்தது. அப்போது மதுரையில் மன்னனுக விளங்கியவன் பேரரசன் முதலாவது மாறவர்மன் குல சேகர பாண்டியன். அந்தச் சமயத்திலே சந்திரகிரிக் கோட்டை யின் காவலனுக இருந்த குமாரமுத்து என்பவன், அலாவுதீன்

படைஞர்கள் வீசிய வேல் ஒன்று பாயக் காயமுற்றுக் கோட்டையைக் காக்க இயலாதவனானன். அதனால், அவமானமுற்றுத் தன் குடும்பத்துடன் தெற்கே வந்து குலசேகர பாண்டியனிடம் அடைக்கலம் புகுந்தான். அவனுடைய நேர்மையையும் வீரத்தையும் கண்ட குலசேகரன் குமாரமுத்துவுக்குத் திருநெல்வேலிச் சீமையிலே சில பகுதிகளை ஒதுக்கிக்கொடுத்து வாழச் செய்தான். அந்தக் குமாரமுத்துவின் பரம்பரைதான் எட்டப்ப நாயக்கர்கள். குமாரமுத்து பரம்பரையிலே வந்த எட்டயபுரத்தாரே தமக்கு வாழ்வளித்த பாண்டியன் பரம்பரையினரான பஞ்சபாண்டியரைக் கயத்தாற்றுப் போரிலே அழிக்கக் காரணமாக நின்றார்கள். நன்றி மறந்த அந்தச் செயலே அவர்களையும் கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்தவர்கள் என்று பலரும் வீணே தூற்ற நேர்ந்தது போலும்! தெய்வம் நின்று கேட்கும் அல்லவா?

இவர்களுக்குமுன் எவரும் பாண்டிநாட்டுக்கு வந்ததாகவோ நாடுகண்டதாகவோ கூறுவதற்கில்லை. சரித்திரம் கூறுவது எல்லாம், பாஞ்சாலங்குறிச்சிப் பாளையம் பஞ்சபாண்டியரின் வாரிசுகளுக்கு மதுரை நாயக்கர்களால் வழங்கப்பட்ட ஊர்களை, மதுரையை விஜயரங்க சொக்கநாத நாயக்கன் ஆண்ட காலத்தில், வஞ்சகமாகக் கி. பி. 1709-ல் வீரபாண்டியக் கட்டபொம்மு நாயக்கன் கைப்பற்றினான் என்பதுதான். இந்தப் பரம்பரை 92 ஆண்டுகள் வாழ்ந்து கி. பி. 1801-ல் முடிந்தது.

## நாய்களை எதிர்த்த முயல்!

பாஞ்சாலங்குறிச்சி மண்ணுக்கு இப்படிப் பட்ட சக்தி யிருந்திருந்தால் கட்டபொம்மு பரம்பரையினர் பன்முறை வீரமாக எதிர்த்துப் போரிட்டு உயிர் துறக்காமல் கோழைகளாக ஓடியிருக்க நேருமா? முயல் மிகவும் பயந்த பிராணி. நாயைக் கண்டதும் ஓடிப் பதுங்கும் இயல்புடைய அதுவா எதிர்த்து நிற்கும்? இந்தக் கதையைக் கற்பனைசெய்தவர் கட்டபொம்மன் பரம்பரையினரைப் புகழ்வதுபோலப் பழித்ததாக இருக்கலாமே தவிர வேறன்று.

பூலித்தேவன் நடத்திய சுதந்திரப் போர்களில் எல்லாம் பொல்லாப் பாண்டியக் கட்டபொம்முவும் (கி. பி. 1736-1760),

ஜெகவீரக் கட்டபொம்முவும் (கி. பி. 1760-1791) எதிரிகளுக்குத்தான் உதவினரே தவிர, சுயநலத்தால் பணிந்து போயினரே தவிர எதிர்த்து நிற்கவேயில்லையே?

கி. பி. 1767-ல் மேஜர் பிளிண்ட் பாஞ்சாலங் குறிச்சியைத் தாக்கியபோது ஜெகவீர கட்டபொம்மு நாயக்கன் (வீரபாண்டியக் கட்டபொம்மனின் தகப்பன்) கோட்டையையும் ஊரையும் விட்டுவிட்டு ஓடிவிட்டான். அதன் பின் கி. பி. 1776-ல் மீண்டும் வந்து டச்சுக்காரர்கள் உதவியால் கோட்டைகட்டி வாழ்ந்தான். டச்சுக்காரர்கள் உதவினது கி. பி. 1783-ல் கலனல் புல்லர்டன் அந்தக் கோட்டை அழிவிலே கண்டெடுத்த 40,000 டச்சு வராகன்களும் ஒப்பந்தமும் விளக்கும். புல்லர்டனுக்குப் பயந்து சிவகிரிக்கு அவன் ஓடி ஒளிந்ததும், பின்னர் பணிந்து, பணங்கட்டி மீண்டும் பாளையக்காரன் ஆனதும் நாடறிந்த வரலாறு.

## கல் வீசும் சம்பவம்!

கட்டபொம்மன் 21-10-1799-ல் தூக்கிலிடப்பட்ட அந்தக் கயத்தாற்றுப் புளிய மரத்தடியிலே வழிச்செல்லும் மக்கள் சாலையிற் கிடக்கும் கற்களை வீசிச் செல்வது வழக்கம். இது அவனைக் கௌரவிக்கச் செய்யப்படுவது என்பர் சிலர். அது சரியா? மறைந்த ஒருவனைக் கல்லெறிந்தா கௌரவிக்கவேண்டும்?

அல்லது, 'கட்டபொம்மு வலு துஷ்டனய்யா-அவன் கன்னங்களவிலே மிச்சமய்யா; இப்படிக் கொள்ளையடித்தாக்கால்-நாங்கள் என்னமாய்க் காலங்கள் தள்ளுவது?' என்று ஜனங்கள் ஏங்கியதாகக் கும்மிக் கவிஞர் கூறுகிறாரே அதன் காரணமாகவா?

இப்படியாகக் கட்டபொம்மன் வரலாற்றிலே எவ்வளவோ மாறுபட்ட கருத்துக்கள். இவை எல்லாம் கட்டபொம்மனைப் புகழ்வோரால் மறைக்கப்பட்டன. இந்த மறைப்புத்தான் இன்று 'கட்டபொம்மன் கொள்ளைக்காரன்' என்று பேசும் அளவுக்கு வேறு சிலரைக் கொண்டுவந்து விட்டிருக்கிறது.

வரலாற்றை ஆராய்ந்து எழுதும்போது நிறைவையும் குறைவையும் உள்ளபடியே எழுதி விட்டால் அதனால் அவன்

மறக்கப்பட்டுப் போக மாட்டான். குறைபாடுகளை ஒதுக்கி நிறைவைப் பாராட்டுவர் மக்கள். அஃதன்றி, நிறைவை மிகைப் படுத்தியும், குறைபாடுகளை மறைத்தும் ஒரு தலைப் பட்சமாக எழுந்த வீரவணக்கமே இந்நாளில் வரிந்து கட்டிக் கொண்டு இருசாராராக் கட்சி பிரிந்து தமிழர் தொல்லைப்படக் காரண மாயிற்று.

## அறிவும்—வடுகரும்!

கடைசியாக அறிவுடையார் எவரும் கொஞ்சமும் தொடர்பு 'கொள்ளக் கூடாது' என்று ஒரு பழம்பாடல் தமிழருக்கு எச்சரிக்கையாக நேமிநாத உரையிலே காணக் கிடைக்கின்றது. அந்தப் பாடலின் கருத்தையும் அமைப்பையும் நோக்கும் போது, வடக்கேயிருந்து அந்தக் காலத்திலே வந்த வடுகர்களால் தமிழ் மக்கள் சொல்லவொண்ணு அல்லற்பட்டிருக்கவேண்டும் என்பது தெளிவாகப் புலனுகிறது.

வடுகர்கள், பழைய நாளிலும் தமிழ் நாட்டினுள் படை கொண்டு வந்து கொள்ளையும் கொலையும் நிகழ்த்தியிருக்கின்றனர். 'அவர்களோடு உறவுகொள்வதே மிகவும் வெறுக்கத்தக்க செயல்' என்ற மனப்பான்மையும் தமிழறிஞரிடையே வளர்ந் திருக்கிறது.

இதனுலேயே, 'அறிவுடையார் எவருமே வடுகரோடு எவ் விதத்தொடர்பும் கொள்ளக் கூடாது' என்று கண்டிப்பாகக் கூறு கிறது இந்தப் பழம் பாடல்.

> 'வடுகர் அருவாளர் வான்கரு நாடர்
> சுடுகாடு பேய் எருமை' என்று, இவை ஆறும்
> குறுகார் அறிவுடையார்.

'சுடுகாடு' அழிவின் களம். 'பேய்' கொடுமையின் உருவம். எருமை எமனின் வாகனம். இவைகளோடு எவராவது தொடர்பு கொள்ள விரும்புவார்களா? இவை போல, வடுகரோடும் தொடர்பே கூடாது என்று வற்புறுத்துகிறது பாடல்.

# கட்டபொம்மனைப் பற்றி....

கட்டபொம்மனைப் பற்றி அந்தக் காலத்திலே படைகளிலே பணியாற்றிய பலர் தாம் எழுதிய கடிதங்களிலே குறித்தனர். சென்னைக் கும்பினி நிர்வாகம் பல ஆணைகளை அனுப்பியது. அந்தக் கடிதப் போக்குவரத்துக்கள் பின்னர் புத்தக உருவிலும் வெளிவந்தன.

'ஓர்ம்' 'வெல்ஷ்' போன்ற சிலர் தாம் எழுதிய சரித்திரக் குறிப்புக்களில் இந்தச் செய்திகளை எழுதி வைத்தனர்; படையணிகளின் வரலாறு எழுதியவர்களும் எழுதினர்.

இதன்பின் திருநெல்வேலி கெசட்டீயர் மானுவல்கள் வந்தன. கால்டுவெல் ஐயரின் திருநெல்வேலிச் சரித்திரமும் வந்தது.

பொதுவாக இவை எல்லாம் நடந்த அக்கால நிகழ்ச்சிகளைச் சொல்பவையாகவும், சம்பந்தப்பட்டவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவிப்பனவாகவும் அமைந்தன. கால்டுவெல் பாதிரியாரின் சரித்திரம் அவருக்கு முன்னிருந்தவர்களின் தகவல்களையொட்டி அந்தப் பகுதியின் சரித்திரத்தைக் கோவைப்படுத்தி உருவாக்க முனைந்தது.

இவைகள் கட்டபொம்மனைப் பற்றிப் பாராட்டப்பட வேண்டிய செய்திகளையும் கூறின; அவன் செய்த பயங்கரத் தவறுகளையும் காட்டின.

இவற்றுக்குப் பின் வந்ததுதான் பாஞ்சாலங்குறிச்சி வீர சரித்திரம். இது, கட்டபொம்மன் இனத்தவரான 'ஜகவீர பாண்டியக் கவிராயரால், கட்டபொம்மனை உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தோடு எழுதப்பட்டதாகும். இதனால் அவன் ஒரு மாவீரன் என்ற பிரசாரம் கால்கொள்ளத் தொடங்கியது.

இதற்குப் பின், பானுகவியவர்கள், எட்டயபுரம் குருகுஹ தாசப் பிள்ளையவர்கள் ஆகியோர் புத்தகங்கள் வெளிவந்தன. ஆசிரியர் தி. நா. சுப்பிரமணியம் அவர்களின் புத்தகமும் வந்தது.

இவை எல்லாம் போதிய பிரச்சாரபலம் பெறாத காரணத்தால் மக்களிடம் எவ்விதமான கருத்தையும் பரப்பவில்லை.

சுருக்கமாகச் சொல்வதென்றால் ஆங்கிலேய ஆட்சியை எதிர்த்து நடந்த சுதேசியப் போராட்ட காலங்களிற்கூடக் கட்டபொம்மன் பெயர் புகழ்நிலைக்கு உயர்த்தப்படவில்லை.

திருநெல்வேலிச் சீமையிலே 'தோல் நாடகம்' என்று வழங்கிய தெருக்கூத்து நடத்திய சிலர் கட்டபொம்மன் பற்றிய நாடோடிப் பாட்டைத் தம் கூத்துக் கதையாகப் பயன்படுத்தத் தொடங்கினர். உணர்ச்சி மிகுந்த கவிஞனின் வாக்கு வன்மை பலரிடம் மதிப்பும் பெற்றது.

இதன் பின்னர், 1949-ல் சிவஞான கிராமணியார் அவர்களின் புத்தகம் வெளி வந்தது.

சிவஞான கிராமணியார் அவர்களின் பேச்சு வன்மையும், அரசியல் தொடர்பும் கட்டபொம்மனுக்குப் புதிய பிரச்சார பலமாயின. அவர் பேச்சிலே கவர்ச்சிக்குட்பட்ட தமிழ் இளைஞர் கள்உள்ளங்களிலே யெல்லாம் கட்டபொம்மன் உயர்ந்த வீரனாகக் குடியேறி அமர்ந்துவிட்டான்.

நாடகமேடை அரசனுக்குக், காட்சியில் நாடகம் முடியும் வரைதானே, பிறர் தந்த ஒப்பனையும், தோரணையும் நிலைநிற்கும்! கட்டபொம்மன் பற்றிய உண்மைகளைப் பிறரும் ஆராய முற்பட்டதும், இவ்வளவு மாவீரனை நாம் மறந்தோமே என்று அந்தக் காலம் பற்றிய நூல்களை யெல்லாம் தேடத் தொடங்கியதும், உண்மை வெளியாற்று.

இதற்கிடையே, சில நடிகர்கள் 'முதல் முழக்கம்' என்ற நாடகத்தை அரங்கேற்றினர். அடுத்து மற்றொரு நடிகர் குழாம், 'வீரபாண்டியக் கட்டபொம்மன்' நாடகத்தை அரங்கேற்றியது. நாடகக் குழுவினரின் நடிப்புத் திறனுக்காக நாடகத்திற்கு ஆதரவும் பெருகியது. முதல் முழக்கம் மறைந்தது; பிந்தியது புகழ்பெறவும் தொடங்கியது.

இதற்கு முன்னர் ஆனந்த விகடனில், கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் கட்டபொம்மன் நாடோடிப் பாடலை ஒழுங்கு படுத்தி வாரா வாரம் வெளியிட்டும் வந்துள்ளார்கள்.

இப்படியாகத், தமிழ் நாட்டிலே 'கட்டபொம்மன்! கட்ட பொம்மன்!' என்ற பெயரினைப் பல பல விதங்களில் அவரவர் நோக்கங்களுக்கும் தகுதிகளுக்கும் வசதிகளுக்கும் ஏற்றவாறு பலர் வளர்த்து வந்தனர்.

## புதிய புத்தகம்!

இப்படி வளர்ந்து வந்த நாளிலேதான் ஒரு பிரசுரத்தார் வீரபாண்டியக் கட்டபொம்மன் என்ற நூலை வெளியிட்டனர். அதன்கண் கட்டபொம்மனைப் பற்றிச் 'சரித்திரங் கண்ட கட்ட பொம்மன்' என்ற பகுதியில் பல கேள்விகள் எழுப்பப்பட்டன. அந்தக் கேள்விகளும் செய்திகளும் எஸ். கே. ஸ்வாமி என்பவர் ஆராய்ந்து கூறியவை. கட்டபொம்மனை வீர வணக்கத்துக்கு உயர்த்தியவர்கள் அவற்றுக்கு உரிய முறையில் ஆதாரங்களைத் திரட்டி மறுப்புத் தெரிவித்திருக்கலாம். ஆனால், அவர்கள் அப்படிச் செய்வதற்கு மாருகக் கட்டபொம்மனைப் பற்றித் தாங்கள் சொல்வதற்கு மாறுபட்டுப் பேசுபவர் எழுதுபவர் அனைவருமே துரோகிகள் என்று பழிக்க முன்வந்தனர். தம் ஆராய்ச்சித் திறனைப் பயன்படுத்திக் கட்டபொம்மன் வரலாறு பற்றிப் புதிதாகக் கிளப்பிய பிரச்னைகளையும் ஆராய்ந்து பாரபட்ச மற்ற முடிவுக்கு வர அவர்கள் முன்வரவில்லை. இது மிகவும் கவலைப்படவேண்டிய நிலை.

'சரித்திரங்கண்ட கட்டபொம்மனுக்கு மறுப்பு' என்று தக்க ஆதாரத்துடன் ஆராய்ந்து கூறினுல், அந்த ஆதாரங்கள் அனை வரும் ஏற்கும் நிலையிலேயும் இருந்தால், அதனை அனைவரும் உவப்புடன் வரவேற்பார்கள் அல்லவா?

அவர்கள் நிலை அப்படியிருக்க, ஒரு புதிய கிளர்ச்சியும் தோன்றியது. அதனை முன்னின்று நடத்தவும் பலர் முன்வந்தனர். அவர்கள் வரலாற்றுக் காரணத்திற்காக எழுதப்பட்ட சரித்திரங் கண்ட கட்டபொம்மனின், 'கட்ட பொம்மன் கொள்ளைக்காரன்' என்ற பகுதியைமட்டும் மிகைப்படுத்தி எழுதத் தொடங்கினர்.

கட்டபொம்மன் முதல் முழக்கம் செய்தவன் என்ற பிரசார வேகத்தைத் தடுக்க அவனுக்கு முன்னரே வீரமுழக்கம் செய்த பூலித்தேவர் போராட்டம் அவர்கள் கண்களில் பட்டது. மறக்கப் பட்டிருந்த அவர் பெயரை அவர்கள் மன்றத்திலேற்றினர்.

பிரேமா பிரசுரத்தாரின், வீரபாண்டியக் கட்டபொம்மன் புத்தகம் முழுவதுமே ஒரே கருத்தை கொண்டதாயிருக்கவில்லே. முதற் பகுதி நாடறிந்த கட்டபொம்மனே அப்படியப்படியே புராணக் கதைபோல அறிமுகப்படுத்தியது. அடுத்த பகுதி கும்மிப் பாடல்களோடு விளங்கியது. அதற்கும் அடுத்த பகுதி தான் துர்க்காதாஸ் எஸ். கே. ஸ்வாமி அவர்கள் தொகுத்த சரித்திரம் கண்ட கட்டபொம்மன்.

'தொகுத்த' என்ற சொல் பல நூல்களினின்றும் அவர் சேகரித்த தகவல்கள் என்ற கருத்துடனேயே இங்கும் எழுதப் படுகிறது.

## பூலித்தேவர் புலித்தேவரானுர் !

துர்க்காதாஸ் ஸ்வாமியின் புதிய தகவல்கள் பூலித்தேவரைப் பற்றிய தகவல்களேச் சேகரிக்கப்பலரைத் தூண்டின. அவரும், மேலும்பல ஆதாரங்களேயும் தகவல்களேயும் சேகரிக்கத்தொடங் கினுர்.

ஸ்வாமியின் முயற்சி 'தமிழ் வீரன் பூலித்தேவன்' என்ற நூல் வடிவிலே வெளிவந்து எங்கும் பரவிக்கொண்டுமிருக்கிறது.

அவரைப் பின்பற்றிப் பூலித்தேவரைப் பற்றி எழுத முயன்ற வர்களுக்குப் பலநாள்வரை அவர் எழுதிய முதல் நூலே ஆதாரமா யிருந்தது. அவர்கள் அதனே அப்படியே பின்பற்றவும் முற்பட்டனர். ஸ்வாமி அவர்கள் 'பூலித்தேவர் என்ற பெயரின் வடிவைப் 'புலித்தேவர்' என்று மொழிபெயர்ப்பிலே மாற்றியிருந் ததைக்கூட அவர்கள் கவனிக்கவில்லே. புலித்தேவர் என்றே தாமும் எழுதத் தொடங்கி இன்றுவரை எழுதி வருகின்றனர்.

'இது பிழை யாயிற்றே' என்ற கவலே ஸ்வாமிக்குப் பின்னர் ஏற்பட்டதென்ருலும், அதனே நிறைவு செய்து விடுவது போலத்

தம் தனி நூலுக்குத் தமிழ் வீரன் பூலித்தேவன் என்றே தலைப்புத் தந்தார். பொதுவாக ஆராய்ச்சியிலே ஈடுபடும்போது இப்படிச் சில பல தவறுகள் நேர்வது இயல்பு. உண்மையை உணர்ந்ததும் அதனைத் திருத்திக்கொள்வதுதான் ஆராய்ச்சியாளரின் கடமை. இதனைப் பின்பற்றித் தம் நூலுக்கும் பூலித்தேவர் என்றே தலைப் புத்தந்த ஸ்வாமியை நாம் பாராட்டத்தான் வேண்டும்.

அடியெடுத்துத் தந்த ஸ்வாமி தன்னைத் திருத்திக் கொண்டாலும், அந்த அடியையொட்டிப் பின்னர் தொடர்ந்து செல்ல முற்பட்டவர்கள் ஏனோ திருத்த முன்வரவில்லை?

## புலித்தேவர் பிரசாரம்

பூலித்தேவனைப் போற்றும் அன்பர்கள் பூலித்தேவன் ஊருக்கே சென்றிருக்கிறார்கள். அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்தவரும் தற்போது நெற்கட்டாஞ்செவல் பஞ்சாயத்துத் தலைவராயிருப்பவருமாகிய பூலித்துரைப் பாண்டியருடன் பேசியிருக்கிறார்கள். நாடோடிப் பாடல்கள் பலவும் சேகரித்ததாகச் சொல்லுகிறார்கள். எட்டயபுரத்துக் குருகுஹதாசப்பிள்ளையவர்கள் எழுதிய திருநெல் வேலிச் சீமைச் சரித்திரத்தைப் படித்து இருக்கிறார்கள். எல்லாம் இருந்தும், புலித்தேவர் என்று பிழையாக எழுதுவதைப் பூலித் தேவர் என்று திருத்தி எழுதமட்டும் அவர்கட்கு மனம் வரவில்லை.

ஆசிரியர் சஞ்சீவியவர்கள் எழுதிய புத்தகம் 'பூலித்தேவர், என்ற பெயர்தாங்கி வந்த போதும், அந்தப் பெயருக்குக் காரணங்களை அவர்கள் ஆராய்ந்து எழுதியதைப் பார்த்தபின்னரும் இவர்கள் தங்கள் பழக்கத்தை மாற்ற முன்வரவில்லை.

அதற்கு என்னதான் காரணமோ? முதலில் எழுதி விட்டோமே, இப்பொழுது எப்படி மாற்றுவது? என்ற, எண்ணமாயிருந்தால், அது தவறு. அப்படியானால், கட்டபொம்மனைப் பற்றி ஒரு சாரார் காட்டி வந்த உயர்ந்த நிலையைப் பிழையானது எனக்கூறித் திருத்திக்கொள்ள வேண்டும் எனப்பேசும் இவர்களே இப்படிச் செய்தால், இவர்கள் முயற்சியும் வெறும் வேடிக்கையாகி விடும்.

அது மட்டுமன்று; நண்பர் ஸ்வாமி பாக்கியசாலியாகியும் விடு கிருர். அவர் முதலிலே செய்தபிழை, இன்று அதனைக் கையாளும் பலரையும் அவருக்குப் பின்னரே அந்தத் துறையிலே இறங்கிய வர்கள் என்று காட்டிக் கொடுத்துவிடுகின்றது. இதுதான் 'தீமை யிலும் நன்மை' என்ற பழமொழிக்கு எடுத்துக் காட்டுப் போலும்!

ஸ்வாமிக்கு முன்னரே இவர்கள் பூலித்தேவரை ஆராய்ந்திருந் தால் இந்தப் 'புலித்தேவர்' என்ற சொல்லை இவர்கள் எடுத்தாண் டிருக்கவே மாட்டார்கள்.

இவர்கள் 'புலித்தேவர்' என்று ஏன் பூலித்தேவரைக் குறிப் பிட வேண்டும்? முன்னோர் வழங்கிய ஒரு பெயரை, அதிலும் வரலாற்று முதன்மை வாய்ந்த ஒரு தலைவரின் பெயரையே இப்படி மாற்றத் துணியலாமா? இப்படி மாற்றுவதும், பிழை யென்றறிந்த பின்னரும் பிடிவாதமாகப் பழைய பாதையிலேயே போவதும் வரலாற்றுத் துறைக்குச் சிறிதும் நன்மையன்று.

இந்தப் பிழையானது இவர்களது பிற முயற்சிகள் பல வற்றையும் மற்ருெரு கண்ணேட்டத்துடன் காணவேண்டிய சிக்கலையும் ஏற்படுத்தும். இது நன்றன்று. எனவேதான், இந்தப் பெயர் ஆராய்ச்சி தனியே எழுதப்பட வேண்டிய சூழ்நிலைக்கு எம் போன்ருரைக் கொணர்ந்தது.

பத்திரிகைகளின் பலமும், விளம்பர வசதிகளும், நாடக மன்றத்தாரின் ஒத்துழைப்பும், அரசியல் கட்சியொன்றின் பலத்த ஆதரவும் தமக்கு இருக்கிறதென்று இவர்களும் கருதுவார் களானுல்,

'பொய்யுடை ஒருவன் சொல்வன் மையினுல்,
மெய்போலும்மே மெய்போலும்மே!'

என்ற பழம் பாட்டின் அடிகளை நினைந்து தமிழகத்தின் நிலைக்கு வருந்தத்தான் வேண்டும்.

உண்மைக்குத்தான் என்றும் மதிப்பும் கௌரவமும் உண்டு; உண்மை எதுவென அறிந்தும் பிழையையே மீண்டும் போற்றி

வருவது என்றல் அவர்கள்மீது நாம் குற்றங்கூறவும் அவர்களைத் திருத்திக் கொள்ளும்படி வற்புறுத்தவும் கடமைப் பட்டிருக் கின்றோம்.

இந்தக் கடமையும் இந்த நூலினை உருவாக்க நேர்ந்ததற்கான காரணங்களுள் முதன்மையானதாகும்.

இதுவரை கூறியவை எவரையும் புண்படுத்த வேண்டு மென்றோ, அல்லது எதிர்க்க வேண்டுமென்றோ எழுதப்பட்டவை அன்று. வரலாற்று ஆராய்ச்சியில் பல ஐயங்கள் இடையிடையே ஏற்படுவதும், முடிவுகள் சில கொள்ள நேரிடுவதும் இயல்பு. இதனைக் கண்ணுறுவோர் ஆர அமர ஆராய்ந்து முடிவுக்கு வர வேண்டுமே தவிர அவசரப்பட்டு ஆத்திரப்படுதல் கூடாது. இந்த வேண்டுகோளுடன் இனி மேற்செல்வோம்.

## பகுதி–2

## பூழியும் பூலியும்

## பூழியன்-பாண்டியனு ?

செந்தமிழ்நாடு பழங்காலத்திலே மூவேந்தர் நாடு என்று கூறப்பட்டது. மூவேந்தர்கள் சேரர் சோழர் பாண்டியர் என்போர். 'இவர்கள் மூவராக விளங்கினதால் மூவேந்தர் என்று அழைக்கப்பட்டனர்' என்று சொல்வது பொருந்தாது. 'மூ' என்ருல் 'பழைமை' என்று பொருள்; மூதூர் என்று சொல்வதைப்போல. பழைமையான இந்த மூவேந்தர்களோடு ஒரு காலத்திலே தொண்டைமானும் சிறப்புடன் விளங்கிவந்தான்.

ஒரு சமயம், ஔவையார் அந்த நான்கு நாடுகளையும் பாராட்ட விரும்பினுர். ஒவ்வொரு நாட்டிலும் சிறப்புடைய ஒன்றைப் பாட்டின் கருத்தாக அமைத்து அவர்களைச் சிறப்பித்தார்.

> 'வேழம் உடைத்து மலைநாடு மேதக்க
> சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
> தென்னுடு முத்துடைத்து தெண்ணீர் வயற்ருெண்டை
> நன்னுடு சான்ருேர் உடைத்து.'

என்பதுதான் அந்தப் பாடல். அந்தப் பாடலில் பாண்டியன் பூழியர் கோமான் என்று குறிப்பிடப்படுகின்ருன்.

இதனைப் போலவே திருஞானசம்பந்தர் பாண்டியனின் வெப்பு நோயை நீக்கிய செயலைக் குறிக்கும் போது,

> 'பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்'

என்கிறது ஒருபழம் பாடல். இவரும் பாண்டியன் 'பூழியர் கோன்' என்ற கருத்தை ஏற்றுக் கொண்டே பாடியிருக்கின்ருர்.

கலிங்கத்துப்பரணி ஜெயங்கொண்டார் பாடியது. அதன் கண், குலோத்துங்கன் பாண்டியரையும் வென்று பாண்டிய நாட்டின் சக்கரவர்த்தியாகவும் விளங்கினுன் என்பதைக் குறிக்கப் 'பூழியர்பிரான் அபயன்' என்று போற்றுகின்ருர் அவர். (பரணி —16).

இவ்வாறு 'பூழியர்' என்ருெரு இனத்தாரும், அவர்களுக்குக் கோமானுகப் பாண்டியனும் பல இலக்கியங்களிலே குறிக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

பாண்டி நாட்டுப் பல பகுதிகளில் இன்றும் 'பூழி' என்ற பெயரடியாகத் தோன்றி வழங்கி வரும் பல ஊர்ப் பெயர்களைக் காணலாம்.

வாசுதேவநல்லூரை அடுத்து இருக்கும் ஓர் ஊரின் பெயர் 'புளியங்குடி'. இந்த ஊரின் பெயர் 'பூழியன்குடி' என்று இருந்தே இவ்வாறு திரிந்திருத்தல் வேண்டும் என்று அறிந்தோர் கூறுகின்றனர்.

ஸ்ரீவைகுண்டம் தாலூகாவில் சாத்தாங்குளத்தை யடுத்துப் 'புளியங்குளம்' என்ற ஊரைக் காணலாம். இதுவும் 'பூழியன் குளம்' என்பதன் சிதைவேயாகும்.

இன்னும், புளியறை, பண்புளி என்ற ஊர்களும் பூழியறை, பண்பூழி என்றே ஒரு காலத்தில் வழங்கிப் பின்னர் கொச்சை யாகிப் புளியறை, பண்புளி என வழங்கி வரலாயிற்று. கோவை மாவட்டத்துக் கோபிச்செட்டிப் பாளையத்தை யடுத் துள்ள புளியம்பட்டி என்ற ஊரும் பூழியன்பட்டி என்ற மூலத் திலிருந்துதான் வந்திருக்க வேண்டும்.

மேலும், வைணவப் பெரியாரான நம்மாழ்வாரைப் 'பூழிப் பிரான்' என்று வழங்குவதும் 'பூழி' பாண்டியனைக் குறிக்கும் பெயராதலை வற்புறுத்தும்.

இவையெல்லாம் பாண்டியன் 'பூழியன்' என்ற சிறப்புப் பெயரினைத் தனக்கு உரிமையாக உடையவன் என்ற கருத்தினை அரண் செய்வனவாகும்.

## பூழியன்-சேரனு?

பூழியர்கோன் பாண்டியன் என்பதற்கு மேலே சில ஆதாரங் களைக் கண்டோம். இதைப்போலவே 'பூழியன்' சேரனையுங் குறிக்கும் என்பதற்கும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

அவற்றுள், முதன்மையானது புறநானூற்றின் 387-வது பாடல். சேரமான் சிக்கற்பள்ளித் துஞ்சிய செல்வக் கடுங்கோ வாழியாதனைக் குறுங்கட்பாலியாதனார் பாடியது அந்தப் பாடல். 'வள்உகிர வயல் ஆமை' எனத் தொடங்கும் அப்பாடலின் 28-30 அடிகள் பின்வருமாறு :

'ஊழி வாழி பூழியர் பெருமகன்
பிணர் மருப்பு யானைச் செருமிகு நோன்தாள்
செல்வக் கடுங்கோ வாழியாதன்.'

இதனால், சேரன் 'பூழியர் பெருமகன்' என்ற வழக்குச் சங்க காலத்திலேயே வழங்கியது என்றும் உணரலாம். இதேபோல, இன்னும் பல இலக்கிய வழக்குக்களும் சேரனைப் 'பூழியர் பெருமகன்' என்று குறிக்கும்.

கி. பி. பதினாறும் நூற்றாண்டின் முற்பகுதியில் கேரள மன்னனாயிருந்த மார்த்தாண்ட வர்மன் பூழி மார்த்தாண்டவர்மன் என்று அழைக்கப்பட்டான். இதனைக் களக்காட்டுக் கோயிற் கல்வெட்டுக் கூறுகின்றது. களக்காட்டுச் சீமையானது, அவன் சோழ நாட்டு இளவரசியை (வீரசேகர சோழனின் மகள்) மணந்தபோது சீதனமாகக் கொடுக்கப்பட்டதென்றும், களக் காட்டுக்குச் சோழகுலவல்லிபுரம் என்ற பெயரும் அதனால் ஏற் பட்டதென்றும் நாம் அறிகிறோம். இவன் களக்காட்டு ராஜா என்றே கல்வெட்டுக்களில் குறிக்கப்படுவான். இவன் ஆட்சியிலே மேற்குமலைச்சாரலை யடுத்துள்ள திருநெல்வேலிச் சீமைப் பகுதிகள் பலவும் அடங்கியிருந்தன.

ஆகவே, புறநானூற்றுக் காலத்திலேயிருந்து கி. பி. பதினா றும் நூற்றாண்டின் முதற்பகுதி வரையிலும், கேரளத்து மன்னர் களும் 'பூழியர் கோமான்'களாகக் குறிக்கப்பட்டனர் என்று நாம் அறிகின்றோம்.

இவையன்றியும், பழந்தமிழ் நூலுள் ஒன்றும், சேரசோழ பாண்டியர் மூவரையும் போற்றுவதுமான முத்தொள்ளாயிரம் என்ற நூலின் பாடல்களுள்ளும் சேரனே 'பூழியன்' என்று போற்றப்படுகின்றான்.

முத்தொள்ளாயிரப் பாடல்கள் முழுவதும் கிடைக்கப் பெற வில்லை. எனினும், கிடைத்த வரையுள்ள பாடல்களில் சேரனைப் 'பூழியன்' என்று குறிக்குஞ் சில பாடல்கள் காணப்படுகின்றன. அவை,

'மரகதப்பூண் மன்னவர் தோள்வளை கீழா
வயிரக் கடகக்கை வாங்கித்-துயருழந்து
புண்ணுற்று அழைக்கும் குறுநரித்தே பூழியனைக்
கண்ணுற்று வீழ்ந்தார் களம்.' 1

'நீரும் நிழலும்போல் நீண்ட அருளுடைய
ஊரீரே யென்னை உயக்கொண்மின்-போரில்
புகலும் களியானைப் பூழியர்கோக் கோதைக்
கழலுமென் னெஞ்சங் கிடந்து.'

இவ்விரண்டு பாடல்களுள்ளும் சேரமான் 'பூழியன்' என்றும் 'பூழியர் கோ' என்றும் குறிக்கப்படுகின்றான்.

## பூழியர் யார்?

'பூழியர்' என்பவர் யார்? இவர்கள் தமிழ் நாட்டின் ஒரு பகுதியிலே வாழ்ந்தவர். செந்தமிழ் பேசாது, செந்தமிழ்ச் சொற் களிலேயே சில பல கொச்சைச் சொற்களையுங் கலந்து கொடுந் தமிழ் பேசி வந்தவர். இப்படி இவரைக் கூறுவர் தமிழ் அறிஞர்.

இதற்குச் சான்றாக நன்னூலின் 271, 273-வது சூத்திரங் களைக் கவனிக்க வேண்டும். 271-வது சூத்திர உரையில் செந் தமிழ் நிலம் அடியிற்கண்டவாறு குறிக்கப்படும்.

'சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியும்
சவுந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாடனும்
சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநா டென்ப.'

இதனால், பாண்டிய நாடு செந்தமிழ் நாடு என்று தெரிகின் றோம். சிலர், செந்தமிழ்நிலம் வையையாற்றின் வடக்கு என்பர். அது பொருந்தாது என்பதனை நன்னூல் சங்கரநமச்சிவாயர் உரையாற் காண்க.

273-வது சூத்திர உரையில் செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்ததும் கொடுந்தமிழ் பேசப்பட்டு வந்ததுமாகிய பன்னிரண்டு நிலப் பகுதிகள் கூறப்பட்டுள்ளன. அவை :

'தென்பாண்டி குட்டம் குடங் கற்கா வேண்பூழி
பன்றி யருவா அதன் வடக்கு-நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ் சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண் '

இந்தப் பன்னிரண்டு தமிழ்நிலப் பகுதிகளுள் 'பூழி நாடும்' ஒன்று. இங்கே வாழ்ந்த தமிழ் மக்கள் தம் நாட்டையொட்டிப் 'பூழியர்' எனப்பட்டனர். அவர்களுக்கு மன்னனாயிருந்தவன் 'பூழியர் கோன்' என்று கூறப்பட்டனன்.

## பூழிநாடு எது ?

பூழியர் தமிழர் என்றோம். இந்தப் பூழி நாடு இன்றையத் தமிழகத்தின் எந்தப் பகுதியைக் குறிக்கும் என்பது இனி நாம் கருதுதற்கு உரியதாகும்.

'பூழி நாடென்பது இன்றைய சித்தூர் மாவட்டப் பகுதிகளைத் தன்னுட் கொண்டது' என்பார் கல்வெட்டாராய்ச்சியில் சிறந்தவரான ஸ்வெல். அவர் கருத்துக்கு ஆதரவாக அப் பகுதிகளிற் காணப்படும் கல்வெட்டுக்களும் விளங்குகின்றன. இது பிற்காலத்திய வழக்காயிருத்தல் வேண்டும். காரணத்தைப் பின்னர் ஆராய்வோம்.

பூழி நாடு மதுரைக்கு வடமேற்கே யிருந்ததென்பர், 'தமிழ் ஸ்டடீஸ்' என்ற ஆங்கில நூலின் ஆசிரியரான சீனிவாச அய்யங்கார் அவர்கள். இவர்கள் கருத்துப்படி திருச்சி மாவட்டத்தின் மேற்குப் புறப் பகுதிகளும், சத்தியமங்கலம், கோபி, உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சித் தாலூகாக்களும், கொச்சி ராஜ்யத்தின் சில பகுதிகளும், தொண்டிவரையுள்ள மேலைக் கடற்கரைப் பகுதியும் பூழி நாடு ஆகும்.

இந்த இரண்டு கருத்துக்களையும் சீர்தூக்கிப் பார்த்தால் முன்னர் சொல்லியதைவிடப் பின்னர் சொன்ன கருத்தே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும் என்பது நன்ருக விளங்கும்.

முன்னர் நாம் எடுத்துக் காட்டியதுபோலப் 'பூழியர்கோன்' என்ற பெயர் சேரருக்கும் பாண்டியருக்கும் வழங்குவதால், இந்தப் பூழி நாடானது இருவர் நாட்டையும் அடுத்திருந்த ஒரு பகுதியாக இருப்பதும், அடிக்கடி இருவர்க்கும் இடையே கைம் மாறிக்கொண்டிருப்பதும்தான் உண்மையாக இருந்திருக்க வேண்டும். இதனை ஏற்றுக்கொண்டால் 'பூழி' பின் சொன்ன கருத்துப்படியுள்ள நிலப்பகுதியைக் குறிப்பதேயாகும் எனலாம்.

இந்தப் பூழியரின் நாடு சேரரின் நிலப்பகுதியன்று. ஒரு தனி நிலப்பகுதியாகும் என்பதற்கும் நாம் முன்னர் எடுத்துக் காட்டிய, 'தென்பாண்டி' என்ற பாடலே சான்று பகரும். அந்தப் பன்னிரண்டு நிலப்பகுதிகளும் தனித்தனியே குறிக்கப் பட்டதிலிருந்தே, அவை தமக்கெனத் தனித்தனியான ஒருவகை எல்லையும், வாழ்வியல் அமைப்பும் கொண்டிருந்தவை என்பது விளங்கும். மேலும், அந்தப் பாடலையடுத்து 'இன்ன நாட்டார் இன்ன சொல்லை இப்படி வழங்குவர்' என்று நன்னூல் உரையில் குறித்திருப்பதிலிருந்து, பேச்சிலேகூட அவர்கள் தனித்தனிப் பாணியினைக் கையாண்டுவந்தனர் என்பதும் பெறப்படும்.

இது தனி நாடாகவே கருதப்பட்டது என்பதற்குப் பழந் தமிழ் நூல்களிலே பல ஆதாரங்களைக் காணலாம். அவற்றுள் ஒன்று, களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனூர் பாடிய பதிற்றுப் பத்தினுள் காணப்படும். அது வருமாறு:

'ஊழிஞகிய உயர்பெருஞ் சிறப்பிற்
பூழி நாட்டைப் படையெடுத்துத் தழீஇ'

(4-ம் பத்தின் பதிகம்)

சேரமான், பூழிநாட்டைப் படையெடுத்துச் சென்று வென்று தன் நாட்டினேடு சேர்த்துக் கொண்டான் என்பதே இதன் பொருள். இதேபோலச் சேரமன்னரைப் பதிற்றுப் பத்துள்

குறிக்கும், 'பூழியர் மெய்ம்மறை' (73: 11, 90:27) என்ற தொடரும், 'பூழியர் கோ' (21: 23, 84-6) என்ற வாசகமும் பூழியர்களை வென்று வாகைசூடிய வெற்றிப் பெருமிதத்தைக் காட்டுவனவே என்று கொள்ளலாம்.

பூழியர் தனிநிலப் பகுதியிலே இருந்தனர் எனக் காட்டும் பகுதிகள் புறநானூற்றிலும் நற்றிணையிலும் காணப்படும். அவை:

'யாரணங் குற்றனை கடலே பூழியர்'—புறம்; 163.
'பூழியர், உருவத் துருவி னண்மேயலாகும்'—நற்றிணை; 192

மேலும், தென்பாண்டி, குட்டம், குடம் ஆகிய மூன்றும் கடற்கரையோரத்து நாடுகள். தென்பாண்டி, பாண்டிமண்டிலத்துத் தென்பகுதியாக இருந்தது. வேண், பூழி என்று வரும் வரிசையைக் கொண்டு வேணாட்டுக்கு அடுத்திருந்த நாட்டுப் பகுதியே 'பூழி' என்பாரும் உளர். இவர்கள் கருத்து, பூழி நாடு சிங்கம்பட்டி நெற்கட்டாஞ்செவல் ஆகியவையும் பிறவும் அடங்கிய நிலப்பகுதி என்பது. ஆனால், இந்தப் பகுதி பல இலக்கியங்களிலும் 'கல்லக நாடு' என்றே குறிப்பிடப் பட்டுள்ளது. அதனால், இது பொருந்தாதமுடிவு என்பதும் இந்தக் கல்லக நாடுதான் 'கற்கா நாடு' என்பதும், இதனையடுத்து மேலை மலைச்சாரலை ஒட்டியிருந்த பகுதியே பூழிநாடாயிருத்தல் வேண்டும் என்பதும் தெளிவாகும்.

இதனால் எல்லாம், 'பூழி' சேரர்க்கும் பாண்டியர்க்கும் இடைப்பட்டுக் கிடந்த ஒரு நாடு என்பதும், சேரனோ அல்லது பாண்டியனோ ஒருவனைவிட ஒருவன் ஆற்றல் மிகுந்தவனாயின போது அவர்களுக்குள் மாறிமாறி வெற்றியால் உரிமையுடையதாயிருந்த நிலப்பகுதி என்பதும் விளங்கும்.

அல்லது, 'பூழி' என்ற சொல்லுக்குக் குழை சேறு, புழுதி என்றிருக்கும் பொருள்களைக் கருதினால், அத்தகைய பலப்பல நிலப் பகுதிகளுக்கும் பூழி என்றே பெயர் தமிழகத்தில் பண்டு வழங்கிற்று எனவும் கொள்ளலாம் என்பர் சிலர். இதுவும் அவ்வளவு பொருந்தாததே.

## சிந்திக்கத் தூண்டினர்!

இந்தப் பெயரைப் பற்றிய முடிவு தெரியாது திகைத்தவன் தான் நானும். ஆனல், அதிர்ஷ்டவசமாக ஒரு நாள், இராமநாத புரத்து அரசரவர்களின் தம்பியாரான திரு. காசிநாத துரை அவர் களிடம் இது சம்பந்தமாக அவர்களின் கருத்துக்களைக் கேட்க வேண்டிச் சென்றேன். அப்போது, அவர்கள் கூறிய கருத்தே இது. பூழியிலிருந்துதான் பூலி வந்தது என்பது. மறவர் குடிப் பெருந் தலைவர் குடும்பத்திலே வந்த அவர்கள் அருளிய கருத்து மேலும் என்னை இதுபற்றி சிந்திக்கத் தூண்டியதன் விளைவே இந்த ஆராய்ச்சிப் பகுதி எனலாம்.

## மறவர் பிரிவுகள்

பாண்டி நாட்டிலே ஒரு சமயம் யாழ்ப்பாணத் தளகர்த்தனின் படையெழுச்சி நடந்தபோது, பாண்டியர்க்கு உதவியாகச் சோழ நாட்டு மறவர் படையொன்று வந்தது. அந்தப் படையினர் உதவியால் இலங்கைப் படைகளை வென்று துரத்திய பாண்டிய மன்னன், சேதுக்கரையைப் பாதுகாக்கும் பொறுப்பினை அந்தச் சோழநாட்டு மறவர்படைத் தலைவனுக்கு வழங்கினன். இவ்வாறு சோழ தேசத்திலிருந்து பாண்டிய நாட்டிலே வந்து குடியேறிய மறவர்கள் செம்பிய நாட்டு மறவர்கள் என்று கூறப்படுவர்.

இந்தச் செம்பியநாட்டு மறவர் குடியினரே பிற்காலச் சேதுபதிகள். இவர்களுக்கு முன்னரே பாண்டிநாட்டுக் காவலை மேற்கொண்டிருந்த மறவர் குடியினர் காரண மறவர்கள் எனப் படுவர். இவர்கள் தங்களைத் திரிகூடபதிகள் எனவும் சொல்வ துண்டு. இவர்கள் ஆதிக்கத்திலிருந்தவை வடகரை முதலிய பாளையங்கள்.

இவ்விரு சாராரையும் அடுத்து, பழைய மறவர்கள் சிலரும் அந்த மேலேமலைச் சாரலை அடுத்த பகுதிகளில் இருந்தனர். இவர்கள் பாண்டிய நாட்டினுள்ளே இருந்தாலும் பழைய காலத்துச் சேரர் தொடர்பையும் மறக்கவில்லை. சேரநாட்டு மார்த்தாண்டவர்மனுக்கு இம் மறவர் பெரும்படை செய்த உதவி பெரிது. இதனல் எல்லைப் புறத்திலிருந்த இவர்கள் சேரன் பாண்

டியன் இருவருக்கும் பொதுப் பெயராக விளங்கிய 'பூழி' என்ற பட்டத்தை மேற்கொண்டு 'பூழித்தேவர்' என்றும் 'பூலித் தலைவர்' என்றும் தங்களை அழைத்துக் கொண்டனர்.

பூழித்தேவர் என்ற பெயர் பல பல மாறுபட்ட வடிவிலே மறவர் குடியினரிடையே நிலவிவரத் தொடங்கியது. பூலுத் தேவர், பூலையாத் தேவர், பூலித்தேவர், பூல்தேவர் பூலியப்பன் என்பன அவற்றுள் சில.

## பூழியும் புழுதியும்

'பூழி' என்ற சொல்லுக்கே புழுதி என்ற பொருளும் உண்டு. பெரும்பாலும் பாலை நிலப்பகுதியாக இருந்து புழுதிபட்டுக்கிடந்த நிலங்கள் எல்லாம் பூழிநாடு என்று குறிக்கப்பட்டிருத்தலும் கூடும். ஆனால், வளமை பொருந்திய மேலைமலைச்சாரலின் கீழ்பால் பகுதிகளுக்கு அது பொருந்துமாறில்லை.

பூழி என்பது புழுதி என்னும் பொருள்பட விளங்கும் இலக்கியச் சான்றுகள் பல. அவை:

பெருங்கதையுள் படையெழுச்சி ஒன்றினைக் குறிக்க வருவது—

'ஒளிறுவேல் இளையர் தேர்நீ றளைஇக்
களிறுகால் உதைத்த புஞ்சப் பூழியொடு
மான்றுகள் அவிய மதுப்பலி தூவவும்'
—பெருங் ; 33,84-86.

'நாழி படுத்துத் தமரையும் தெளியான்
பூழி படுத்த சாதனை அமைவில்'—பெருங் ; 46, 85-86

'மம்மர் கொண்ட மனத்தர் ஆகித்
தோழியர் எல்லாம் பூழியுட் புரளவும்'
—பெருங் ; 46, 292-293.

இதேபோலப் பழந்தமிழ்ப் பெருநூலான புறநானூற்றுள் ளும் புழுதி கூறப்படும் இரண்டு இடங்களில், 'பூழி' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

'வெப்புள் விளைந்த வேங்கைச் செஞ்சுவல்
கார்ப் பெயற் கலித்த பெரும்பாட்டு ஈரத்துப்
பூழி மயங்கப் பல உழுது வித்திப்
பல்லி ஆடிய பல்கிளைச் செவ்வி' —புறம்; 120, 1-4.
'கொழுங் கிழங்கு மிளிரக் கிண்டிக் கிளையொடு
கடுங்கண் கேழல் உழுத பூழி' —புறம்; 168, 3-4.

சிறுபாணாற்றுப் படையில், 'பூழி பூத்த புழற்காளாம்பி' என்று வரும் தொடரும் இதனை வலியுறுத்தும்.

இப்படிப் பல விடங்களில் 'பூழி' என்ற சொல் புழுதியைக் குறிப்பதால், பூழி நாடு புழுதிமிகுந்த நாடு என்று கருதலாம். இஃதன்றியும், போர்க்களத்திலே இடசாரி வலசாரியாகச் சுழன்று பெரும்போர் ஆற்றிக் களமே புழுதிபடும்படி வீரச்செயல் புரியும் படை மறவர் என்ற கருத்தினை யொட்டியும், அத்தகையோர் இருந்த நாடு 'பூழி நாடு' என வழங்கியுமிருக்கலாம்.

இன்னும், பழங்காலத்திலே போர்ப் படைகளின் படையெழுச்சியின் போது முன்னணிப் படைகளாகச் செல்லும் புரவிப் படையும், புரவிகள் பூட்டிய தேர்ப் படையும் தூசிப் படைகள் என்று அழைக்கப் படுவதும் உண்டு. இதன் உண்மை புறப் பொருள் வெண்பாமாலைப் பாடல் 134-ன் உரையிற் காணப்படும். தூசிப் படை என்பதே பூழிப்படை என்றும் கூறப்படும். இப்படிப்பட்ட பூழிப் படையணிகளில் விளங்கிய வீரமறவர்கள் 'பூழித் தேவர்' என்று சிறப்பிக்கப்பட்டனர் என்பது மற்றொரு கருத்து.

நம் பூலித்தேவர் பற்றிய மட்டிலும் இது மிகவும் பொருத்தமானதாகும். அவருடைய முன்னணிப் படையான குதிரைப் படையின் காரணமாகவே அவர் வெற்றிகள் பல பெற்றனர் என்றும், அதனை அழிக்க யூசுப்கான் கி. பி. 1756-வது வருஷம் டிசம்பர் 1-ஆந் தேதி முயன்றனன் என்றும் சரித்திரம் கூறுகிறது.

எனவே, இதுவும் ஏற்புடைய காரணமாகவே தோன்றுகின்றது. எப்படியிருப்பினும் இதன்கண் நாம் தெளிய

வேண்டியது எல்லாம் 'பூழித்தேவன்' என்பதுதான் பூலித்தேவன் என்ருயிற்று என்பதேயாகும்.

## பூலித்தேவர்—புலித்தேவர்?

'பூலித்தேவர்' என்ற பெயரே பழங்காலத்திலிருந்து பலப்பல சுவடிகளிலும் வழங்கிவந்திருக்கிறது. கி. பி. 1839-இல் அச்சேறி வெளிவந்த ராபர்ட்ஸன் அவர்களின் 'ஒரு பத்திரத்திரட்டு' என்ற புத்தகம் முதல், 1939-இல் வெளிவந்த குருகுஹதாசப் பிள்ளையவர்களின் புத்தகம் வரை, ஆகஸ்டு 15, 1958-இல் வெளிவந்த ந. சஞ்சீவி அவர்களின் புத்தகம்வரை, பிரேமா பிரசுரத்துப் புத்தகம் நீங்கலாகப் 'பூலித்தேவர்' என்றே வழங்கியிருக்கக் காணுகிரும்.

இது இப்படியிருக்க, ஆங்கில மொழிபெயர்ப்புக் காரணமாக ஏற்பட்ட பிழையை அப்படியே 'புலித்தேவர்' என்று சிலர் பின்பற்றி வருகின்றது மிகவும் வேடிக்கையான தவறல்லவா? மேலும், இவர்கள், பலபல நூல்களையும் ஆராய்ந்து தம் வரலாற்றை உருவாக்குவதாகவும் சொல்லுகிருர்கள்? அப்படியிருக்கும் போது, 'புலித்தேவர்' என்று எழுதுவது பிழையென்று அவர்களுக்குத் தெரியாமலிருக்கவே முடியாதல்லவா? தெரிந்தும், பிழையான சொல்லைக் கையாள்வது சரித்திர நாயகனை பூலித்தேவன் புகழுக்கு அடிப்படையில் இவர்களே கேடுவிளைவிப்பதாகும் அல்லவா? இதனை அறிந்தும், அப்படியே தொடர்வதுதான் மிகவும் வருத்தந் தருவதாகவும், 'அந்தோ! தமிழ் மக்களே! இப்படிப்பட்ட பிழைகளை இனியும் பொறுக்க வேண்டுமோ?' என்று கூறி இரக்கப்பட வேண்டுவதாகவும் உள்ளது.

செம்புலி, வலங்கைப் புலி என்பதுபோல ஆற்றலைக் குறிக்கும் அடையாளப் பெயரோடு வழங்கப்பட்டாலும், 'புலி' என்ற பெயரோடு தென்னகத்து மறவர்கள் பெரும்பாலும் இருந்ததில்லை. எனவே, 'புலித்தேவர்' என்பது மிகவும் தவருன பிரயோகம் என்பது தெளிவாகும்.

மேலும், பூலித்தேவர் குடும்பத்தவரான பூலி நாச்சியார், பூலி சங்கரன் என்ற பெயர்களும், இப்போதும் இருக்கும் பூலித் துரைப்பாண்டியர் அவர்கள் பெயரும் 'புலித்தேவர்' என்பதற்குச் சற்றும் ஆதரவு தருவதாயில்லை.

இப் பெயரை முதன் முதற் கையாண்ட திரு. எஸ். கே. ஸ்வாமியே மாற்றிக் கொண்டபொழுது, அவரைப் பின்பற்றிப் பூலித்தேவர் போராட்டங்களை ஆராய முன்வந்தவர்களும் மாற்றிக்கொள்ளத்தான் வேண்டும். இப்படி மாற்றிக்கொள்வது தான் அவர்களுக்குப் பெருமையுமாகும்; தமிழ் வரலாற்றுக்கு உதவியுமாகும்.

———

## பகுதி-3

### பூலி-ஐயனர் பெயரா?

# பூலியும் புலித்தேவரும்

ஆசிரியர் சஞ்சீவி அவர்கள் 'பூலித்தகங்குழைந்து' என்ற திருவாசகத் தொடரை ஆதாரமாகக் கொண்டு, பூலித்தேவர் கட்டமைந்த உடல் வலிமை பெற்றவர்; அதனல் பூலித்தேவர் எனப்பட்டனர் என்று கூறுவர்.

'பூலித்தேவர்' என்ற பெயர் ஒரு தனி மனிதரின் பெயராக மாத்திரம் நிலவாது, நெற்கட்டாஞ் செவல் பாளையத் தலைவருக்கு மேற்கொள்ளும் பெயராக, இராமநாதபுரத்தார் 'சேதுபதிகள்' என்பது போலவும், எட்டயபுரத்தார் 'எட்டப்பர்' என்பது போலவும், சிவகிரியார் 'வன்னியர்' என்பது போலவும் பதவிக்கு வரும் பலருக்கும் பரம்பரையாக வழங்கி வரும் பெயராக இருந்திருக்கிறது; அதனல், போராட்ட மாவீரர் பூலித்தேவரைமட்டுமே கருத்திற்கொண்டு ஆசிரியர் சஞ்சீவி அவர்கள் கூறியிருப்பது பொருந்தாதெனக் கருதவேண்டுவதாகின்றது.

'பூல்-பூலா' என்பன ஒரு மரவகையைக் குறிக்கும் பெயர். இதனடியாக இயற்கைப் பொருள்களின் பெயரைச் சூடுதல் என்ற முறைப்படி, 'பூலித்தேவர்' வந்திருக்கலாம் என்றும் ஆசிரியர் சஞ்சீவி அவர்கள் கருதுவார்கள். இது கவனிக்கப்பட வேண்டியதென்ருலும், ஆசிரியர் சஞ்சீவிஅவர்கள் கூறுவதுபோல அப்படியே கொள்வதற்கில்லை. மருது பாண்டியர் என்ற பெயர் மருது மரத்திலிருந்து இயற்கையை ஒட்டி வரவில்லை. அது அவர்கள் குலதெய்வத்தின் பெயர். அதேபோலப் பூலா மரத்திலிருந்து இயற்கையை ஒட்டி இந்தப் பெயர்மட்டும் ஏன் தோன்றியதோ? இதனை ஆசிரியர் அவர்கள் விளக்கவில்லை. எனவே, இவர்கள் துணிபு, வலிந்து கொள்ளப்பட்டது என்பது வெளிப்படையாகும். 'பூழி' தான் 'பூலி' எனத் திரிந்தது என்று நாம் முதலில் விளக்கினேம். இனிப் பூலாவுக்கும் பூலிக்கும் உள்ள தொடர்பையும் ஆராய்வோம்.

## பூலாவும் பூலியும்!

'பூலா' என்ற பெயரை யொட்டித் தென்னகத்திலே விளங்கும் ஊர்கள் பல. அவற்றுள், பூலாங்குறிச்சி, பூலாங்குளம், பூலாங்குண்டு, பூலம், பூலாங் கிணறு, என்பன சில.

தென்னகத்தின் பல கோயில்களிலும் தலவிருட்சம் என்ற ஒன்று இருக்கக் காணலாம். பழங்காலத்திலே இந்த மரத்தடியிலேயே திருவுருவங்கள் இருந்தன. பிற்காலத்திலேதான் கோயில்கள் எழுந்தன. எனினும், அந்தப் பழைய தலவிருட்சங்களையும் யாரும் மறப்பதில்லை. உதாரணமாக, 'வேணுவனநாதர்' போன்ற பல சுவாமிகளின் பெயரைக் குறிப்பிடலாம்.

இதேபோலப் 'பூலா' என்ற குறுமரத்தினடியிலே ஐயனர் கோயில் விளங்கியதாம் சீவலப் பேரிச் சீமையில். அந்த ஐயனர்க்குப் பூலா உடையார் என்றும் பூலார் உடையார் என்றும் பெயர்.

தென் பாண்டி நாட்டிலே சாத்தன் கோயிலும், ஐயனர் கோயிலும், மாதா கோயிலும் பிரபலமானவை. இவைதாம் குல தெய்வங்கள் என்ற புகழுக்கும் உரியவை. சைவம் வைணவம் ஆகிய மதத்தினர்களாயினும் இந்த சாத்தன் கோயில் அடிமைகளாகவே இருப்பர். இவை மாதாகோயில் அம்மன் கோயில் எனவும்படும்.

சிவம் வைஷ்ணவம் இரண்டுக்கும் பொதுவான 'ஹரிஹர' இணைப்பு உருவமே சங்கரநயினர் கோயிலின் மூர்த்தியாகிய சங்கரநாராயணர். இந்தக் கோயிலின்மீதும் இந்தச் சங்கர நாராயணர் மீதும் பூலித்தேவர் குடும்பத்தார் மிகவும் ஈடுபாடு உடையவர்கள் என்பது வெளிப்படை. புதுக்கோட்டைச் சீமைப் பகுதியில் விளங்கும் பூலாங்குறிச்சியில் ஒரு ஐயனர் கோயில் சிறப்பாக இன்றும் விளங்குகிறது.

கம்பளத்தார்க்குச் சக்கம்மா தேவியும், சிவாஜிக்குப் பவானியும்; பாண்டியர்க்கு மீனுட்சியும் எப்படி விளங்கினர்களோ அப்படியே பூலித்தேவர்க்குச் சங்கரநாராயணரும் விளங்கினர்.

'ஐயனர்' ஹரிஹரபுத்திரர் என்பது ஐதீகம். எனவே, சங்கரநாராயணரின் மீது அளவுகடந்த ஈடுபாடு உடைய பூலித்

தேவர் குடும்பத்தார், ஹரிஹர புத்திரரும் பூலார் உடையாரு மான ஐயனார்பெயரையே தம் குடும்பத்தவர் பலருக்குஞ் சூட்டினர் என்று கருதலாம் அல்லவா?

இந்த ஐயனார் பெயரையொட்டிப் பூல்ப்பாண்டியன் பூலாத்தாள், பூலி, பூலு, பூலார், பூலையா என்ற பலவகைப் பெயர் கள் இன்றும் தமிழகத்து மறவர் குடிகளில் வழங்கிவரக் காணலாம். தமிழ்நாட்டுத் தஞ்சைமாவட்டத்துப் பட்டுக் கோட்டையைச் சேர்ந்தவரும், பிரபல காங்கிரஸ் தலைவரும், தஞ்சை மாவட்டக் கழகத்துத் தலைவராக இருந்தவருமான திரு. நாடிமுத்துப் பிள்ளையவர்களின் பூர்வீக வீட்டின் முன்கூடப் 'பூலித்தேவர் பங்களா' என்ற பெயர் இருக்கக் காணலாமாம்.

இவற்றால், குலதெய்வப் பெயரையிடும் வழக்கத்தையொட்டி இந்தப் 'பூலித்தேவர்' என்ற பெயர் எழுந்தது என்பதும் நாம் கருத வேண்டிய தகுதியுடைய ஆதாரமாகின்றது.

## புலியூர்மேடு-பூலிராயன்

திருமலையாதிபன் பேரில் மன்னர் பெருமாள் புலவர் பாடிய 'நொண்டி நாடகம்' என்றொரு பழந்தமிழ் நூல் உள்ளது. அதன் கண் மதுரைப் பதிக்கு அரசனாக அந்நாள் விளங்கிய விஜயரங்க சொக்கநாத நாயக்கன் என்பவன் ஒரு சித்திரைத் திங்கள் சித்திரை விசுவன்று தென்காசியில் வந்து தங்கியிருந்த சிறப்புக் கூறப்படு கிறது. அப்போது, தென்னகத்தின் பிரபல பாளையக்காரர்கள் பலரும் வந்து சொக்கநாத நாயக்கனைக் கண்டனராம். அவருள்,

'இரவலர் கலிகோபன் - முத்தமிழ்
எல்லாம் படித்தறிந்த சல்லாபவேள்
வரகுண ராமச்சிந்தா - மணியெனும்
வடக்காத்தான் பூலிராயன்'

என்பவனும் ஒருவனாவன். இங்கும், 'பூலிராயன்' என்றே பெயர் வழக்கு நிலவுவது காண்க.

இதே நூல், விஜயரங்க சொக்கநாதனும் அவன் கூட்டமும் தண்டு இறங்கியிருந்த இடம் 'புலியூர் மேடு' என்றும் குறிப்பிடு

கிறது. இந்தப் 'புலியூர் மேடு' என்ற பெயரும் 'பூழியூர் மேடு' என்ற பெயரின் சிதைவே என்பர் அறிந்தவர் சிலர்.

இந்த 'வடக்காத்தான் பூலிராயன்' என்பவர் பெயரும் 'பூலி' என்ற பெயர் வழக்கை நிலை நாட்டும்.

## பூலி-பழைய வழக்குக்கள்

'பூலார் உடையார்' என்ற ஐயனார் கோயிலை ஒட்டியே 'பூலி' என்ற பெயர் தமிழகத்தில் வழங்கிற்று என்றோமல்லவா? அந்தக் கருத்துக்கு ஆதரவு தருவதுபோல இந்தச் சொல்லின் ஆட்சி முக்கூடற் பள்ளிலே பல இடங்களில் காணப்படுகின்றது. அதனைக் காண்போம்.

'பொங்கலுமிட்டுத் தேங்காயும் கரும்பும்
பூலாவுடையாருக்குச் சாலக் கொடுங்கள்.'

இந்தப் பாடலடிகள் 'பூலாவுடையார்' என்ற ஐயனாருக்குப் பொங்கலிடுவது பற்றியும், தேங்காயும் கரும்பும் படையலிடுவது பற்றியும் கூறுகின்றன.

'நன்னி உடைச்சி சடைச்சி மூக்கி
நல்லி பூலி ஆலி வேலி......'

இவை பள்ளர்குடிப் பெண் மக்கள் பலரின் பெயர்கள். இவற்றுள் 'பூலி' என்ற பெயர் வழக்குங் காணப்படுகின்றது.

'கடிதின் எழுந்து பூலிவேலி காலில் விழுந்து கெஞ்சவே ...'

இங்கும் 'பூலி' என்ற பெயருடன் ஒரு தமிழ்ப் பெண் குறிக்கப்படுகின்றனள்.

இவற்றால், 'பூலி' என்ற பெயர் மறவர்குடிப் பெருமக்களைப் போல மற்றைய குடியினராலும் வழங்கப்பட்டுவந்த பெயர் என்று நாம் அறியலாம்.

'பூலான் வயித்தி வேலான்' என்று வரும் தொடர், 'பூலி' என்பது போலப் 'பூலான்' என்று ஆண்களின் பெயர் அமைவதும் உண்டெனவற்புறுத்துகின்றது.

இவையெல்லாம் பூலார் உடையார் என்ற ஐயனாரின் பெயரை ஒட்டியே 'பூலி' என்ற பெயர் எழுந்திருக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துவனவாகும்.

ஆனால், வீர மறவரின் தகுதியும் மாண்பும் நாட்டபிமானமும் பூழித்தேவர் என்ற கருத்துக்கே ஆதரவு தருவதாகவுள்ளது.

எது எவ்வாறிருப்பினும், 'பூலித்தேவர்' என்பதுதான் சரி. 'புலித்தேவர்' என்பது மிகவும் தவறு! தவறு!! என்ற முடிவுடன் இந்தச் சிறு ஆராய்ச்சியை முடிக்கின்றேன்.

தமிழ் மக்கள் 'அறிவுக்கு விருந்து' பெறுவதில் அதிக ஆர்வம் உடையவர்கள். இதன்கண் சொல்லப்பட்ட செய்திகளின் உண்மைகளையும் சிந்தித்து அநுபவிப்பார்களாக!

## தென்றலும் புலியும்!

புலித்தேவனா, கட்டபொம்மனா? என்ற கட்டுரை யொன்று சில வாரங்களாகத் தென்றல் வார இதழிலே வெளிவந்து கொண்டிருந்தது. முதலில் இதனைக் கண்டதும், அந்தக் கட்டுரையாளரான திரு. புகழேந்தி அவர்கள் தென்பாண்டித் தொடர்பு உடையவராயிருந்துங்கூடப் 'புலித்தேவர்' என்று எழுதுகின்றனரே என்று கவலைப்பட்டதுண்டு.

ஆனால், 20-12-58 தென்றலிதழ் இந்தக் கவலையை நீக்கி விட்டது. பூலித்தேவர் என்ற பெயர்தான் சரி யென்று அவர்களே அதனில் விளக்கியுள்ளனர். திரு சஞ்சீவியவர்கள் காட்டியபடி, பெயர் தோன்றிய காரணத்தை அவர்கள் அப்படியே மேற்கொண்டாலும் கூடப், 'புலித் தேவர்' என்று குறிப்பிடுவது தவறு என்று அறுதியிட்டுக் கூறியதற்காகப் பெரிதும் பாராட்ட வேண்டும். அவர்கள் கட்டுரையின் சில பகுதிகள் வருமாறு :

"புலித்தேவன் என்று இவர்களால் குறிக்கப்படுபவனின் பெயர் புலித்தேவன்தானா!

"இல்லை பூலித்தேவன்" 'பூலி' என்கிற பெயர் இன்றளவும் நெல்லை மாவட்டத்து மறவர் மக்களிடம் வழங்கிவரும் பெயராகும். 'பூலியப்பன்' என்று இப்போது வாலிபர்களாக இருப்

போரில் பலருக்குக்கூடப் பெயர் இருக்கிறது. 'புலி' என்ருே, 'புலியப்பன்' என்ருே யாருக்கும் பெயர் இடப்படுவதில்லே.

"'இனி, புலித்தேவன் வாழ்ந்த காலத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், அப்போது 'புலி' என்று பெயரிடும் வழக்கம் இருந்தது என்பதற்கும் ஆதாரம் இல்லே. தவிரவும் பூலித்தேவன் பற்றிக் கிடைக்கும் அரசினர் குறிப்புக்களிலெல்லாம், இப்போது இந்தக் குரல் கிளம்புவதற்கு முன்னுல்வரை வந்த ஏடுகளில் எல்லாம் அவன் புலித்தேவனல்ல; பூலித்தேவனே!"

இதனுல், இவர்களும் தாம் தலேப்புக்காக முதலிற் கொண்ட பெயரைப் 'பூலித் தேவர்' என்றே இருக்க வேண்டும் என இப்போது ஏற்றுள்ளனர் என்று தெரிகிறதல்லவா?

## முடிவுரை

இந்த இருபதாம் நூற்ருண்டினேப் பிரச்சாரயுகம் என்று ஒரே வார்த்தையில் கூறிவிடலாம். சொல்வன்மையும் எழுத்து வன்மையும் தமக்கே உரியவரும், அல்லது அவை உடையவரைத் தமக்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற வசதியுடையோரும் மிகவும் எளிதாகப் பிரச்சார வசதிகளின் மூலம் இந்நாளிற் புகழ் பெற்று விடுகின்றனர். இப்படிப் புகழ் பெற்று வருபவரைப் பார்க்கும் பலரும் தாமும் எப்படியாவது புகழ்பெற வேண்டும் என்று முந்துகின்றனர். இந்தப் புகழ்ப் போட்டியிலே உண்மை யாளர்களே விடப் பகட்டாளர்களே மிகவும் விரைவாகப் பெரிய மனிதர்கள் என்ற நிலேக்கும் உயர்கின்றனர்.

பிரச்சார ஆர்வத்துக்குத் தக்கபடி வசதிகளும் இக்காலத்தில் பெருகியுள்ளன. பத்திரிகைகள் புத்தகங்கள் ஆகியவை பலப்பல வெளிவருகின்றன. அவற்றைப் படிக்கும் மக்கள் தொகையும் நாடோறும் பெருகி வருகின்றது.

பேச்சுவன்மையுடையவர் பலர் தோன்றுகின்றனர்; நாடெங்கும் பேசுகின்றனர். அவர்கள் பேச்சு நயத்தினேக் கேட்டு அநுபவிக்க மக்களும் கூடுகின்றனர்.

மக்களுக்கு அறிவுப் பசி அதிகம். 'அந்தப் பசிக்கு உணவு' என்று கூறித் தமக்குத் தர வருபவரான பேச்சாளர்களின் பேச்சுக்களையும், வரும் பத்திரிகைகளையும் மக்கள் விரும்புகின்றனர். மக்களின் இந்த விருப்பம் நல்லதுதான். ஆனால், சிலரால் இது மிகவும் தவறாகவும் பயன்படுத்தப்பட்டுவரவும் காணுகின்றோம்.

இப்படி வளர்ந்து வரும் மக்களின் அறிவுப் பசிக்கு நல்ல விஷயங்கள் பலவற்றையும் உணவாகத் தந்து, அவர்களிடையே நல்வாழ்வும் நல்ல சிந்தனைகளும் உருவாக இவர்கள் எல்லோரும் முயன்றால் நாட்டுக்கு மிகவும் நன்மையுண்டு. ஆனால், இவர்கள் நாட்டு நன்மையையும், உண்மைச் சம்பவங்களையும் ஒதுக்கி விட்டுத் தாங்களும் தங்கள் கருத்துக்களும்தான் உயர்ந்தவை என்று, வேண்டாத பல விவாதங்களை மக்களிடையே விதைத்து விடுகின்றனர்.

ஒவ்வொரு நாட்டின் சரித்திர நாயகர்கள் பலரையும் பற்றிய வரலாறுகள் மக்களால் ஒருவகை உணர்ச்சி வெறியுடனேயே போற்றப்படுகின்றன. நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் இயற்கையான மனித உணர்ச்சிகள். இவற்றைக் கிளறிவிட்டு மக்களைத் தத்தம் கட்சிக்குச் சேர்க்க முயல்கின்றனர் இவர்கள்.

வரலாற்று நாயகர்களைப் பற்றிக் கூறும்போது பலவகையான அடிப்படைகளைக் கவனிக்க வேண்டும். முதலாவதாக, ஒரு நாட்டை வென்று கைக்கொண்டோர் அந்த நாட்டைப் பற்றி எழுதும் சரித்திரம் எப்பொழுதுமே உண்மையான வரலாறாக அமையவே முடியாது. இரண்டாவதாக, தோல்வியுற்றோர் தாம் தோற்றதற்கான காரணங்களைக் கூறுவதும் பெரும்பாலும் அப்படியே நம்ப முடியாதவை. மூன்றாவதாக, நாட்டபிமானத்தை மொழி அபிமானம்தான் பேணி நிறுத்துகிறது. இவற்றைப் பலர் நினைப்பதே இல்லை.

இப்படிப்பட்ட உண்மைகளை மறந்ததால் வந்த விபரீதம் தான் கட்டபொம்மன் பற்றிய புகழ்ப் பிரச்சாரமும், அதற்கு எதிர்ப் பிரச்சாரமும். மக்கள் கருத்துப்படி இவை இரண்டுமே நாட்டு நலனுக்குத் தேவையற்றவைகள்தாம்.

தமிழினத்துக்கு உணர்வூட்டத் தமிழினத்து வழிவந்த மாவீரர்களுக்குப் பஞ்சம் ஏதும் ஏற்பட்டுவிடவில்லையே? சங்க காலந் தொடங்கித் தமிழ் நாட்டுக்காக உழைத்தவர் எத்துணையோ பேர் இருக்கின்றார்களே? இவர்களைப் பாராட்டுவதும் இவர்களை லட்சியமாகக் கொள்ளுமாறு மக்களைத் தூண்டுவதும் எவ்வளவோ பயன் தருமே? இப்படியிருக்கத் தமிழனல்லாத கட்டபொம்மனைப் பற்றிய ஆராய்ச்சியே தேவையற்றதாகும்.

இவற்றை மறந்து விட்டு, இங்கு வந்து குடியேறி இந்த நாட்டிலே தமக்குச் சிற்றரசும் உரிமையும் வகுத்துக் கொண்டு, அதனைத் தம் நன்மைக்காகவே காக்க முன்வந்த கட்டபொம்மனை உயர்த்துவதும் லட்சிய புருஷனுக்கச் சிலர் முயல்வதும் அவனைச் சிலர் தூற்றுவதும் வேண்டாத செயலாகும்.

கட்டபொம்மன் வாழ்விலிருந்து மக்கள் தமக்கு அறிவுரையாகக் கொள்ளத்தக்கவை எதுவும் விசேஷமாகக் கிடையாது. கட்டபொம்மன் நவாபுக்கு வரிவாங்க உரிமை கிடையாது என்று மறுத்ததாகச் சொல்லப்படுவதை உண்மை என்றே ஆதாரங்கள் நிரூபிக்கவில்லை. உண்மை என்றே கொண்டாலும் எந்த நீதிப்படி நவாபுக்குத் தென்பாண்டிச் சீமை நிலங்களைத் தனதென்று கூறி வரிவாங்கும் உரிமை கிடையாதோ, அதே நீதிப்படி கட்டபொம்மன் கூட்டத்தாருக்கும் தென்பாண்டிச் சீமையிலே இருந்து அரசாளவும் வரிவாங்கவும் கொஞ்சமும் உரிமை கிடையாது என்று தெளிவாகக் கூறலாமல்லவா?

பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டிலே தென்னகத்தைக் கொள்ளையிடவந்த நவாபும் கும்பினியும் எப்படித் தமிழகத்தின் எதிரிகளாவார்களோ, அதே நீதிப்படி அதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன் வந்த வடுகர்களும் தமிழ் உரிமை என்ற அடிப்படைப்படி எதிரிகள் தாமே? பின் வந்தவர்களை விட்டுத் தமிழகம் விடுதலை பெற வேண்டும் என்பது எவ்வளவு நியாயமோ, அதே போல முன் வந்தவர்கள் பிடியினின்றும் தமிழகம் விடுதலை பெற வேண்டுவதுதானே உண்மையான நியாயமுமாகும்?

எனவே, கட்டபொம்மன், தமிழர்களைப் பொறுத்தவரை, 'தமிழர் சரித்திரத்தின் ஒரு குறிப்பிட்டகாலத்தே தமிழகத்தைக்

கைப்பற்றிய வடுகன். அவனுக்குப் பின் தமிழகத்தைக் கைப்பற்ற நினைத்த ஆற்காட்டு நவாபுவின் படைகளாலும் அவர்களுக்கு உதவிய ஆங்கிலப் படைகளாலும் அழிக்கப்பட்டவன்' என்ற இடத்தைப் பெறத் தகுதியுடையவனே தவிரத், தமிழ் நல்வாழ்வுக்குப் போராடிய லட்சியபுருஷன் என்று அவனை உயர்த்துவதும் மக்கள் மனத்திலே பதிய வைப்பதும் பொருத்தமற்றதாகும்.

இப்படித் தவருக உயர்த்தப்பட்ட காரணத்தால்தான் இன்று அவனுடைய புகழ் சரிந்துவிடாமல் தாங்குவதற்குச் சிலர் கட்சியையும் பிரச்சார வசதிகளையும் அதிகமாகப் பயன்படுத்த வேண்டியதிருக்கிறது. சரித்திர நாயகர்களைப்பற்றி இப்படிப்பட்ட கருத்து வேறுபாடுகள் நிலவுவது புதுமையன்று. அவை நிலவுவதை எவராலும் தடுக்கவும் முடியாது.

ஜோன் ஆவ்ப் ஆர்க், கிளியோபாத்ரா, ஷேக்ஸ்பியர் போன்ற பலரைப் பற்றி உலக அரங்கிலே நிகழ்ந்துவரும் விவாதங்களும், இராமாயணம், திருவள்ளுவர், கம்பர் முதலியோர் பற்றியும் வஞ்சி நகரம் எது? என்பது பற்றியும் நம் நாட்டிலே நிலவி வரும் கருத்து வேறுபாடுகளும் தவிர்க்க முடியாதவை.

'கலிங்கம் வென்ற கருணைகரன்' என்று தமிழர் போற்றினல், கலிங்கத்தை யழித்த பகைவன் என்று கலிங்கத்தார் குமுறத்தான் செய்வர். மதுரை நாயக்க அரசை வீழ்த்திய மகமதியப் படையினரை நாம் கொடியவர்கள் என்பது போலவே, பாண்டிய பரம்பரையை அழித்த நாயக்க பரம்பரையினரையும் கொடியவர்கள் என்றுதான் அன்றையத் தமிழர்கள் கூறியிருப்பர்.

எந்த ஏகாதிபத்தியமும் ஓர் இடத்தை வென்று அங்கே கால் கொள்ளத் தொடங்கியதும் அந்த நாட்டிலே ஒரு சில நன்மைகளைச் செய்யத்தான் செய்யும். அதற்காகமட்டும் அவர்களைப் போற்றலாமே தவிர, அவர்கள் தமிழ் மண்ணிலே தமிழனின் உரிமையைப் பறித்துவிட்டு அமர்ந்தவர்கள் என்ற பொதுநிலையை எவரும் மறந்துவிடவே கூடாது. இந்த நியாயம்தான் கட்டபொம்மன் போராட்டத்தைப் பொறுத்தவரை எவ்விதமான கேள்வியுமின்றித் தமிழர் ஒதுக்கிவிடத் தூண்டுவதாகும்.

ஆங்கிலேயரை எதிர்த்து விட்டதால் மட்டும் அவனை நாம் போற்றுவதற்கில்லை. ஆங்கிலேயர் இந்த நாட்டிலே நன்மைகள் செய்யவே இல்லையா? அதற்காக, நாம் சுதந்திரம் வேண்டும் என்று கேட்காமலா இருந்தோம். அது நமது உரிமைக் குரல். அவன் நல்லவனோ, கெட்டவனோ? அது பற்றிக்கூடக் கவலையே யில்லை. ஆங்கிலேயன் நம்மை ஆளவேண்டியதில்லை என்பது தானே நமது உரிமைக் குரல். இதே உரிமை நியாயம் கட்ட பொம்மன் சம்பந்தப்பட்டவரையிலும் பொருந்துமல்லவா?

ஆனால், பூலித்தேவர் போராட்டம் இதற்குப் பெரிதும் விதிவிலக்கானது. அவர் தமிழ் மறவர். தமிழ் வீர பரம்பரை யிலே விளைந்த மாவீரர். அவர் போராட்டம் நியாயமானது. தமிழர்கள் போற்ற வேண்டியது. லட்சியமாகக் கொள்ள வேண்டியது. தமிழகத்தின் உரிமைக் குரல் தமிழ்த் தலைவனிட மிருந்தே எழுந்ததென்றால் அதிலே தமிழனுக்குப் பெருமை. அவரைப் பற்றிய செய்திகளும் அவர் ஒரு வீர வணக்கத்திற்கு உரியவர் என்று காட்டுகின்றன. எனவே, அவரை நாம் போற்ற வேண்டும். இதில் தயக்கமே வேண்டியதில்லை. தமிழர்கள் எல்லோருமே கருத்துவேறுபாடின்றி ஒன்றுபட்டுச் செய்ய வேண்டிய செயல் இது. தமிழர்களைப் பிளவு படுத்தும் கட்டபொம்மனை மறந்து விட்டு, ஒன்று சேர்க்கும் பூலித்தேவனை உள்ளங்குளிரப் பாராட்டலாம். இதில், அந்தக் கட்சிக்கு லாபம்; இந்தக் கட்சிக்குச் செல்வாக்கு என்பதில்லை. பொதுவான விழாவாகவே இவர் நினைவுநாள் கொண்டாடப்படவேண்டும்.

பூலித்தேவர் காலத்தைப் போல எதிர்த்துப் போராட வேண்டிய போர்முனைகள் இன்றில்லை. என்றாலும், மக்கள் தங்கள் உடலையும் உள்ளத்தையும் உறுதிப் படுத்திக் கொள்ள உதவும் ஒரு லட்சிய நாயகனாகப் பூலித்தேவனைக் கொண்டாடலாம்.

சுருக்கமாகச் சொல்வதென்றால், மஹாராஷ்டிரத்தில் 'சிவாஜிக்கு' ஏற்பட்டிருக்கும் அளவுக்குப், பஞ்சாபில் 'ரஞ்சித் சிங்' பெயருக்கு விளங்கும் மதிப்பின் அளவுக்குத் தமிழ் நாட்டிலும், பூலித்தேவர் புகழ் நிலைபெற வேண்டும்.

'பூலித்தேவரைப்' புகழ்வதற்காகமட்டும் இதனை ஓர் ஆடம்பர விழாவாகக் கொண்டாடாமல், அவர் நினைவோடு நாடெங்கும் உடற்பயிற்சி நிலையங்களும், தமிழ் வளர்ச்சி நிலையங்களும் கண்டு தமிழ்நாடு உயரவேண்டும்; உயரும் என்ற நம்பிக்கையுடன் கடமையைச் செய்தால் உறுதியாகப் பலன் தராமற் போகாது.

எனவே, பூலித்தேவரைப் போற்றுவோர் முதலில் தாம் வழங்கும் 'புலித்தேவர்' என்ற சொல்லைத் திருத்திக் கொள்ள வேண்டும் என்றும், கட்டபொம்மனைப் போற்றுவோர் தமிழ் மறவரான பூலித்தேவருக்கு முதலிடம் தந்து தாமும் தமிழ்ப் பற்றுடையோராக விளங்கித் தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கு உதவ முன்வர வேண்டும் என்றும், இரு சாராரையும் வேண்டிக் கொண்டு இந்நூலை இந்த அளவில் முடிக்கின்றேன்.

வாழ்க தமிழ்ப் பண்பு!


**நீங்கள் படித்தீர்களா?**

**தமிழ் வீரன் பூலித்தேவன்**

போராட்ட வரலாறு

**184 பக்கங்கள் : : மலிவான விலை**

**ரூபாய் ஒன்றுதான்**

## புலியூர்க்கேசிகன் எழுதியவை

| | | |
|---|---|---|
| புறநானூறு தெளிவான உரை | ... | 2—25 |
| சிலப்பதிகாரம் ,, | ... | 2—00 |
| கலித்தொகை ,, | ... | 2—00 |
| கலிங்கத்துப் பரணி ,, | ... | 1—50 |
| ஏர் பிடித்தவர் ஏற்றம் | ... | 2—00 |
| குறள் தந்த இல்லற இன்பம் | ... | 2—00 |
| தமிழ்ச்சாரல் | ... | 2—00 |
| சிலம்பும் வாழ்வும் | ... | 2—00 |
| கொக்கோகம் தெளிவான உரை | ... | 1—50 |

## புலியூர்க்கேசிகன் தயாரிப்பு

| | | |
|---|---|---|
| அநுபவ சமையற் கலை | ... | 1—50 |
| அநுபவ வைத்தியம் | ... | 1—00 |
| காதற் பிரச்னைகள் | ... | 1—00 |
| மலைநாட்டுக் காதலி | ... | 1—50 |
| வாழ்க்கையும் கலையும் | ... | 1—50 |

புலியூர்க்கேசிகன் தயாரிப்பு

# சுவையான புத்தகங்கள்

★

1. தமிழ்வீரன் பூலித்தேவன் - விரிவான வரலாறு. துர்க்கா தாஸ் எஸ். கே. ஸ்வாமி எழுதியது. 184 பக்கங்கள் ரூ. 1.00

2. வீரன் திப்பு சுல்தான் — உணர்ச்சியூட்டும் வரலாற்றுச் சித்திரம் - வழித்துணை ராமன் எழுதுவது ரூ. 1.50

3. சிவகங்கைச் சீமை - முத்து வடுகநாதன் ஆட்சியும் - அதற்கு முன்னும் பின்னும் ரூ. 1.50

4. கான்சாகிப் கம்மந்தான் - தமிழ் நாட்டிலே பிறந்து தமிழகத்தை வெல்லப் பிறருக்கு உதவி முடிவில் தானே அழிந்த தமிழன் வரலாறு ரூ. 1.50

5. ஊமையன் சண்டை - பழைய கும்மிப்பாடல் களும் சுவையான விளக்கங்களும் ரூ. 2.50

---

# அருணா பப்ளிகேஷன்ஸ்

தியாகராயநகரம் :: சென்னை - 17

Wrapper Printed at Neo Art Press, Madras-2